பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 03 சனிக்கிழமை (20-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:328


# வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தேர்தல் பணிகளில் இராணுவம்!

## ஆராய்கிறார் ஆணையாளர்

**கொழும்பு,ஒக்ரோபர்20**

**வடக்கு - கிழக்கில் தேர்தல் பணிகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவது குறித்து ஆராயப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

வடக்கு - கிழக்கில் பாதுகாப்புப் பணிகளில் இராணுவத்தினரே தற்சமயம் ஈடுபட்டுள்ளதாலும் -

அங்கு பெரும் எண்ணிக்கையான பொலீஸாரை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்துவதில் சிக்கல்கள் இருப்பதாலும் -

இராணுவத்தினரை தேர்தல் பணியில் ஈடுபடுத்தலாம் என்று கருதப்படுவதாக அவர் சொன்னார்.

முப்படைத் தளபதிகளுடனும் இது குறித்துத் தாம் விரைவில் பேச்சு நடத்தவிருப்பதாகவும் - அவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் களப்பலியான 3 புலிகள்

வவுனியா,ஒக்.20

திருகோணமலை மாவட்டம் - பள்ளித்தோட்டம் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது தமது தரப்பில் மூன்று உறுப்பினர்கள் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

- கப்டன் அன்புக்கினியன் (நமசிவாயம் சிவரூபன் - யாழ்ப்பாணம்)
- 2ஆம் லெப்டினன்ட் ஈழச்செல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கனடா நகரங்களில் விடிகாலைவேளை ஈழத் தமிழர்களின் வீடுகளில் தேடுதல்

### வன்முறைகளுடன் தொடர்புடைய 40 இளைஞர் கைது

றொறண்டோ,ஒக்.20

கனடாவில் றொறண்டோ, ஒட்டாவா மற்றும் குல்ப் பகுதிகளில் நேற்று அதிகாலைவேளை நாநூறுக்கும் அதிகமான பொலீஸார் பல வீடுகளுக்குள் அதிரடியாகப் புகுந்து நடத்திய தேடுதல்களில் நாற்பதுக்கும் அதிக ஈழத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

அங்கு கோஷ்டி மோதல்களில் ஈடுபட்டுவந்த இரு வன்முறைக் கும்பல்களைச் சேர்ந்தவர்களே அதிரடி நடவடிக்கைமூலம் நித்திரைப் படுக்கையில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகக் கனடாச் செய்திகள் தெரிவித்தன.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், ஆள் - வாகனக் கடத்தல்கள், கொலைகள் - கொள்ளைச் சம்பவங்கள் போன்ற பல்வேறு வன்முறை நிகழ்வுகளுடன் தொடர்புடையவர்கள் எனக்கருதப்படும் - வி.வி.ரி.கும்பல் மற்றும் ஏ.கே.கண்ணன் கும்பல் என்று அழைக்கப்படும் - இரண்டு அணிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

கனடா நேரப்படி நேற்று அதிகாலை 4 மணிக்குக் கைது செய்யப்

(12ஆம் பக்கம் பார்க்க)



கனடாவில் நேற்றுக் கைதானவர்களில் மூவர். இடமிருந்து வலமாக ஜெயசீலன் துரைசிங்கம், பஞ்சலிங்கம் நாகலிங்கம், ஜோதிரவி சிற்றம்பலம்.

ஆப்கான் மீதான தாக்குதலைக் கண்டித்து

## வவுனியா நகரில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

### புஷ், பிளேயர் கொடும்பாவி எரிப்பு

வவுனியா,ஒக்.20

ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா தொடர்ச்சியாக நடத்திவரும் தாக்குதலைக் கண்டித்து வவுனியாவில் நேற்று ஆர்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

ஜும்மா தொழுகையை அடுத்து நண்பகலளவில் வவுனியா பள்ளி வாசல் முன்பாக ஒன்று கூடிய சுமார் 300 முஸ்லிம்கள் அங்கிருந்து பஸார் வீதி, யாழ்.வீதியூடாக வவுனியா மாவட்டச் செயலகம் வரை அமெரிக்கா மற்றும் பிரிட்டனுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாகச் சென்றனர்.

ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல்களை அமெரிக்கா உடனடியாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாண்டிச்சேரி முதலமைச்சராக ரங்கசாமி

பாண்டிச்சேரி,ஒக்.20

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தின் புதிய முதலமைச்சராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த என்.ரங்கசாமி நேற்றுப் பதவியேற்றுக்கொண்டார்.

முதலமைச்சர் பதவி வகித்த ஐ. சண்முகம், தமது பதவியை இராஜினாமாச் செய்ததை அடுத்தே புதிய முதலமைச்சர் பதவியேற்றுள்ளார்.

சட்டமன்ற உறுப்பினராக இல்லாத போதும் முதலமைச்சர் பதவி

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுசந்திகாவை தேர்தலில் நிறுத்த இரு பிரதான கட்சிகளும் முயற்சி!

கொழும்பு,ஒக்.20

இலங்கையின் பிரபல ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்காவை தேர்தலில் போட்டியிட வைக்க இரு பிரதான கட்சிகளும் போட்டிபோட்டு வருகின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் சுசந்திகாவை தமது கட்சியில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளன.

இந்தக் கோரிக்கையை ஏற்க சுசந்திகா ஜெயசிங்க அடியோடு மறுத்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

அரசியலில் ஈடுபடும் எண்ணம் சுசந்திகாவுக்கு அறவே இல்லை என்று அவரது கணவர் கூறியுள்ளார். (க)

அமெரிக்க, ஆஸி. நாடுகளின்

## கொழும்புத் தூதரகங்களுக்கு தபாலில் 'அந்திரெக்ஸ்' கிருமி?

கொழும்பு,ஒக்.20

கொழும்பிலுள்ள அமெரிக்க, ஆஸ்திரேலிய தூதரகங்களுக்கு நேற்று 'அந்திரெக்ஸ்' கிருமித் தாக்குதல் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுத் தபால் உறைகளில இரு தூதரகங்களுக்கும் நேற்று வந்து சேர்ந்த தபால்களை உடைத்த போது 'அந்திரெக்ஸ்' கிருமிகளைக் கொண்டதாகக் கருதப்படும் தூள் (பவுடர்) போன்ற பதார்த்தம் அவற்றில் காணப்பட்டதாக அந்தத் தூதரகங்களின் அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியத் தூதரக அதிகாரி

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் உள்விவகாரங்களில் அத்துமீறி தலையிடுகின்றார் கனடாத் தூதுவர்!

### ஸ்ரீலங்கா அரசு உத்தியோகபூர்வமாக முறைப்பாடு

கொழும்பு,ஒக்.20

இலங்கைக்கான கனடாத் தூதுவர் ருத் ஆர்ச்சிபோல்ட் அம்மையார் ஸ்ரீலங்காவின் உள்விவகாரங்களில் அத்துமீறித் தலையிடுகின்றார் என்று கனேடிய அரசிடம், ஸ்ரீலங்கா அரசு உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்திருக்கின்றது.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு கடந்த வாரம் அளித்த பேட்டியில் அவர் பிரஸ்தாபித்த கருத்துக்களே ஸ்ரீலங்கா அரசை சீற்றமடைய வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

கனடாவில் - புலிகளுக்கு நிதி திரட்டப்படுவது தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டபோது -

"ஸ்ரீலங்காவில் புலிகள் குற்றம் இழைக்கவில்லையா? புலிகள் சார்பு வர்த்தகர்களை ஸ்ரீலங்காவிலேயே கைது செய்யாமல் இருப்பதேன்? புலிகளுக்கு ஆதரவாக நிதி சேகரிப்பதைத் தடுப்பதற்கு சர்வதேச ரீதியில் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் ஸ்ரீலங்கா அரசு, தனது நாட்டில் மட்டும் இது தொடர்பான சட்டங்களை நேர்சீராக்கவில்லையே?" என்ற சாரப்பட கனடாத் தூதுவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சில மாதங்களுக்கு முன்னர் விஜயம் செய்திருந்த கனடாத் தூதுவர் அங்கு புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்ததும் -

வெளிவிவகார அமைச்சின் தகுந்த அனுமதியின்றி இந்த விஜயத்தை அவர் மேற்கொண்டதாக வெளிவிவகார அமைச்சு அவர் மீது சீற்றம் கொண்டிருந்ததும் - குறிப்பிடத்தக்கது. (உ)

## போலியோ தடுப்பு மருந்து இன்று 2ஆம் முறை விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

வடக்கு - கிழக்கில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு - இரண்டாம் கட்டமாக - போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்கும் பணிகள் இன்று காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரையும் நடைபெறும்.

யாழ்.மாவட்டத்தில் இதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மாவட்டத்தில் உள்ள 7 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இதற்கென 148 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்களில் சொட்டு மருந்து வழங்கப்படும் என்று மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலு

(12ஆம் பக்கம் பார்க்க)


பெற்றோர்களே!

உங்கள் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டுமருந்து கொடுக்கும் தினம் இன்று (20.10.2001) சனிக்கிழமை

மறந்துவிடாதீர்கள்!!

MANKIND IS OUR BUSINESS

PolioPlus Rotary International

- யாழ். றோட்டறிக் கழகம்.



இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற நிமலராஜன் ஞாபகார்த்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் வி.நவநீதன் தலைமையுரையாற்றுகின்றார்.

மேடையில் கிளி.மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் பி.லுரேந்திரன், யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.கஜேந்திரன், 'ராவய' பத்திரிகையாளர் சுனில் விஜயசேகர, ஊடகவியலாளர் ஐயா சச்சிதானந்தம், யாழ்.மாவட்ட விவசாய கூட்டுறவு சமாசத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் ஆகியோரையும், கூட்டத்திற்கு சமுகமளித்தவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (க-9)

# அராஜகங்களை உலகுக்கு அம்பலப்படுத்தியதால் நிமலராஜனின் குரல்வளை நசுக்கப்பட்டது

## ஞாபகார்த்த நிகழ்வில் சிவஞானம் உரை

யாழ்ப்பாணம்,ஒக்.20

அராஜகங்கள் எங்கு நடந்தாலும் அவற்றை உடனுக்குடன் வெளியுலகுக்கு அம்பலப்படுத்தியவர் நிமலராஜன். இதனாலேயே அவரது குரல்வளை நசுக்கப்பட்டது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட விவசாயக் கூட்டுறவு சமாசத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற நிமலராஜன் ஞாபகார்த்த நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

ஒரு பத்திரிகையாளனை நேரடியாக எதிர்கொள்ளமுடியாதவர்கள் அவனைத் துப்பாக்கி முனையுடன் எதிர்கொண்டது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

எங்கெங்கே இராணுவ அட்டூழியங்கள், படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள் நடைபெற்றாலும் அவற்றை உடனுக்குடன் மிகவும் துணிச்சலாக வெளியுலகிற்கு அம்பலப்படுத்தியவர் நிமலராஜன். இதனைச் சகிக்க முடியாதவர்கள் அவரது குரல்வளையை ஒரேயடியாக நசுக்கி ஒழித்துவிட்டனர் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.கஜேந்திரன் உரையாற்றுகையில் கூறியதாவது-

நிமலராஜன் ஒரு பத்திரிகையாளர் மட்டுமல்ல சிறந்த சமூக சேவையாளருமாவார். பளைப் பிரதேசத்திலே யுத்த சூழ்நிலையில் அகப்பட்ட மக்களை மீட்டெடுப்பதில் எம்மோடு தோளோடு தோள் நின்று பணியாற்றியவர். இவரது உயிர் பறிக்கப்பட்டது மிகவும் வேதனைக்குரியது.

தமிழினத்தை ஓரங்கட்டும் முயற்சியாக அரசு நியமித்துள்ள கைக்கூலிகளினால் நிமலராஜன் கொலை செய்யப்பட்டார். எமது தமிழின எழுச்சிப் போராட்டத்தை மழுங்கடிக்கும் இத் தீயசக்திகளை இனியும் எம்மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்று குறிப்பிட்டார்.

யாழ். ஊடகவியலாளர் சங்கக் காப்பாளர் ஐயா சச்சிதானந்தம் உரையாற்றுகையில் கூறியதாவது:-

பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை செய்யப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியான பின்னரும் கொலை தொடர்பாக எந்த ஒரு தடயமும் இதுவரை கிடைக்கவில்லை. எவரும் கைது செய்யப்படவும் இல்லை. இது இந்நாட்டு மக்களுக்கு நீதியையும், பாதுகாப்பையும் வழங்க முடியாத நிலையில் இந்த அரசு இருக்கின்றது என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

தமிழ் தேசிய நலனில் அக்கறை கொண்ட பத்திரிகையாளர் சமூகம் இந்நாட்டின் புரையோடிப்போன பல விடயங்களை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச்சொல்லும் பணியை நிறைவு செய்கின்றபோது-

விரோத மனப்பான்மை கொண்டவர்கள் அதனைத் தவறாகக் கணிப்பிட்டு நிமலராஜன் போன்ற பத்திரிகையாளர்களைக் கொலை செய்கின்றார்கள். இக்கொலையைச் செய்தவர்கள் மக்களால் நிராகரிக்கப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை - என்று சொன்னார்.

யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே.தவச்செல்வன் உரையாற்றுகையில் -

நிமாலின் கொலையைக் கண்டு முழு உலகுமே அதிர்ந்துபோனது. இக்கொலையைச் செய்தவர்கள் சாதித்தது ஒன்றுமில்லை.

இன்றைய தினம் நிமலராஜன் நினைவு தினம் மட்டுமல்ல சர்வதேச பத்திரிகையாளர் எழுச்சி தினமுமாகும். சர்வதேச பத்திரிகையாளர் தினத்தில் இருந்து இத்தினம் முற்றிலும் வேறுபட்டது. நிமாலைக் கொலை செய்து - தமிழ் மக்களின் போராட்டத்தை விலைபேச முயலும் சக்திகளை எம்மக்கள் அடையாளம் கண்டுவிட்டார்கள் - என்றார்.

இந்நிகழ்வின் இறுதியில் 'ராவய' பத்திரிகையாளர் சுனில் விஜயசேகர மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், யாழ்.தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்டோர் இரத்ததானம் வழங்கினர்.

இதேவேளை நேற்று குடாநாட்டில் பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச அலுவலகங்களின் ஊழியர்கள், சர்வதேச பத்திரிகையாளர் எழுச்சிதினப் பட்டிகளை அணிந்திருந்தனர்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியிலும் மாணவர்கள் 12 மணிமுதல் இரு நிமிடங்கள் எழுதுகோல்களை எழுதாமல் நிறுத்தி அஞ்சலி செலுத்தினர். (க-9-ரி)

## கராத்தே சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்.மாவட்டகராத்தே வெற்றிக் கிண்ணத்திற்கான போட்டியில் இரண்டாவது சுற்றுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் இன்ரநாஷனல் கராத்தே அக்கடமி, ஜப்பான் கராத்தே டுமரியோ சிகாய் அக்கடமி, றகான் மார்ஷியல் ஆட்ஸ் அக்கடமி, சோட்டோகான் கராத்தே அக்கடமி ஆகிய 4 கராத்தேக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

இதற்கான முதலாவது சுற்றுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. (க-15)

## ஐ.நா. தின பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.20

ஐ.நா. தினத்தை ஒட்டி இன்று சனிக்கிழமை கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளில் நடைபெற இருந்த எழுத்துப் பரீட்சை, முன்னர் அறிவித்தது போன்று இன்று சனிக்கிழமை நடைபெறமாட்டாது என்றும் - இப் பரீட்சை 23 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.20

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மூலம் விண்ணப்பித்த மாணவிகளின் ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் -

கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்தில் இயங்கும் மகளிர் கல்லூரிக்கு வந்து அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அதிபர் அறிவித்துள்ளார். (க-15)

## புத்தளத்தில் ஹர்த்தால்

கொழும்பு,ஒக்.20

பொ.ஐ.முன்னணியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான டி.எம்.திஸநாயககாவும் அவரது ஆதரவாளர்களும் புத்தளம் நகரில் மேற்கொண்டதாகக் கூறப்படும் அத்துமீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நேற்று முன்தினம் புத்தளத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (உ-10)


## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

**வேலுப்பிள்ளை செந்தில்நாதன்**

மண்ணில்: 05.07.1931 விண்ணில்: 01.10.2000

*திதி:- சதுர்த்தி 20-10-2001*



ஆண்டொன்று சென்றதையா - ஆனாலும்
ஆறவில்லை எம் நெஞ்சம்!
அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
குடும்ப ஒளிவிளக்காய் இருந்த எம் அப்பாவே!
போற்றுகின்றோம் இறைவன் திருவடியை - நின்
இன்னுயிர் இறைவனுடன் கலந்திடவே!

- மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.* (93612)



## தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா

தமிழினத்தின் மூத்த தலைவர்

G.G.பொன்னம்பலத்தின்

**100ஆவது பிறந்த தின நினைவு விழா**

எதிர்வரும் 07.11.2001, 08.11.2001 ஆகிய திகதிகளில் இவ் விழாவை வடமராட்சியிலும் யாழ்நகரிலும் உணர்ச்சிபூர்வமாகக் கொண்டாடவுள்ளோம். இவ்விடயம் சம்பந்தமாக ஆலோசனை நடத்துவதற்கு எமது கட்சி ஆதரவாளர்களை எதிர்வரும் (21.10.2001) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு (புதியநேரம்) சந்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

இடம்:- வெஸ்டா இன்டஸ்றீஸ் கட்டடம்,
*குளப்பிட்டி றோட்,*
*உயரப்புலம், ஆனைக்கோட்டை.*

*அன்புடன்*
யாழ்.மாவட்ட ஆதரவாளர்கள்,
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்.

(93645)


## 'யுனிசெவ்' ஆதரவுடன்

# லயன்ஸ் கழகங்கள் நடத்திய ஓவியப் போட்டியின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.20

கட்டாயக்கல்வி பிரசார தினத்தை முன்னிட்டு 'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்திய ஓவியப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டியில் கலந்துகொண்டோரில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விவரங்கள் பிராந்திய ரீதியாக வருமாறு:-

**பிராந்தியம் 9 (குழு 1)**

*முதலாமிடம்* - கே. தர்சிகா (இணுவில் லயன்ஸ் கழகம்),

*இரண்டாமிடம்* - வை. பிரவீனா (கொக்குவில் லயன்ஸ்கழகம்),

*மூன்றாமிடம்* - ஆர். சக்திதரன் (இணுவில் லயன்ஸ் கழகம்)

**பிராந்தியம் 9 (குழு 2)**

*முதலாமிடம்* - எம். டிலானி (யாழ். லயன்ஸ் கழகம்)

*இரண்டாமிடம்* - ரி. விஜயபிரகாஸ் (இணுவில் லயன்ஸ் கழகம்)

*மூன்றாமிடம்* - எஸ். வாகீசன் (இணுவில் லயன்ஸ் கழகம்)

**பிராந்தியம் 10 (குழு 1)**

*முதலாமிடம்* - சுட்டெண் எல்சீ/எண்/51 (நல்லூர் லயன்ஸ் கழகம்)

*இரண்டாமிடம்* - வசீகன் (மானிப்பாய் லயன்ஸ் கழகம்)

*மூன்றாமிடம்* - எஸ். சிவராமன் (வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்)

**பிராந்தியம் 10 (குழு 2)**

*முதலாமிடம்* - எஸ். ரவீந்திரகுமார் (கோப்பாய் லயன்ஸ் கழகம்)

*இரண்டாமிடம்* - ஜே. டிசாந்தினி (சுன்னாகம் லயன்ஸ் கழகம்)

*மூன்றாமிடம்* - கே.திலீபன் (சுன்னாகம் லயன்ஸ் கழகம்)

இவற்றுடன் மிகச்சிறந்த ஓவியத்துக்கான பரிசு இணுவில் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த இணுவில் மத்திய கல்லூரி மாணவி கே. தர்சிகாவுக்கும் (குழு-1), யாழ். லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி எம்.டிலானிக்கும் (குழு - 2) வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான பரிசில்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் 'யுனிசெவ்' நிறுவனத்தின் திட்ட அதிகாரி தலைமையில் நடைபெறவுள்ள கண்காட்சி மற்றும் பரிசளிப்பு விழாவில் வைத்து வழங்கப்படும் என்று பிராந்தியம் பத்தின் தலைவர் லயன் எஸ்ஞானராஜா தெரிவித்துள்ளார். (ஐ-10)


## விற்பனைக்கு

ஒக்ரோபர் மாதத்துக்கான கொம்பியூட்டர் ருடே புத்தகங்களும், கடந்த மாதங்களுக்குரிய புத்தகங்களும் விற்பனைக்குண்டு.

**ராஜா குறோசறீஸ்**
153, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (93627)



## யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கம்

JAFFNA CRICKET UMPIRES' ASSOCIATION

### அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் 20-10-2001 முதல் நடத்தப்படும் யாழ்., வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு எமது சங்கத்தினால் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் நியமிக்கப்படவில்லை என்பதை சகல கிரிக்கெட் நலன் விரும்பிகளுக்கும், ரசிகர்களுக்கும் அறியத்தருகிறேன்.

(93641) *கௌரவ செயலாளர்.*

## 13ஆவது நாளாக தாக்குதல்கள் தொடர்கின்றன

காபூல்,ஒக்.20

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள் 13ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்து இடம் பெற்றன.

வளைகுடாவில் தரித்து நின்ற எவ்-15ஈ யுத்த விமானங்கள் முதல் தடவையாக நேற்றைய தாக்குதலில் பங்குகொண்டன.

மஷார்-ஏ-ஷெரீவ் நகரில் உள்ள தலிபானின் ஆயுதக் கிடங்குகள் என்று கருதப்பட்ட இலக்குகள் மீதும் தலிபான் நிலைகள் மீதும் விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின.

(ம-10)

## பலஸ்தீனத்துக்கு இஸ்ரேல் எச்சரிக்கை

ஜெருஸலேம்,ஒக்.20

இஸ்ரேலிய வலதுசாரி அமைச்சரான ரெஹ்வம் ஸிவியின் கொலையுடன் தொடர்புடைய நபர்களைக் கைதுசெய்து ஒப்படைக்க வேண்டும் என்று இஸ்ரேல் பலஸ்தீன அதிகார சபையிடம் கேட்டுள்ளது.

கொலைகாரர்கள் ஒப்படைக்கப்படாவிட்டால் தீவிர தாக்குதலை எதிர்கொள்ள நேரிடும் என்றும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

இஸ்ரேலிய சுற்றுலாத்துறை அமைச்சரான ரெஹ்வம் ஸிவி கடந்த புதன்கிழமையன்று ஹோட்டல் ஒன்றில் வைத்து சுட்டுக்கொல்லப்



ரெஹ்வம் ஸிவி

பட்டார். அவரது கொலைக்கு பலஸ்தீன தீவிரவாத அமைப்பு ஒன்று பொறுப்பேற்றுள்ளது.

தமது அமைப்பின் தளபதி ஒருவரை இஸ்ரேலியப் படைகள் கொன்றதற்குப் பழிவாங்கவே இஸ்ரேலிய அமைச்சரைக் கொலை செய்ததாக அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

(ம-10)

# உலகை அதிர வைத்திருக்கும் 'அந்திரெக்ஸ்' தாக்குதல் பீதி!

நியூயோர்க்,ஒக்.20

அமெரிக்காவில் 'அந்திரெக்ஸ்' கிருமியின் தாக்கத்துக்கு உள்ளான சிலர் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து உலகெங்கும்




'அந்திரெக்ஸ்'க்கு எதிரான 'அன்டிபயாட்டிக்' மருந்துகள் ஐரோப்பியக் கடைகளில் அமோக விற்பனையாகின்றன.

'அந்திரெக்ஸ்' குறித்த பீதி மிக வேகமாக - மோசமாக - பரவிவருகிறது.

அமெரிக்காவில் இதுவரை 8 இடங்களில் 'அந்திரெக்ஸ்' பரவியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புளோரிடாவில் உள்ள அமெரிக்கத் தகவல் திணைக்கள ஊழியர்கள் இருவரை 'அந்திரெக்ஸ்' தாக்கியது. அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். இதுவே 'அந்திரெக்ஸ்' குறித்து முதலில் வெளியான தகவல் ஆகும். பின்னர் நியூயோர்க்கில் உள்ள என்.பி.ஸி. தொலைக்காட்சி நிறுவனத்தின் அதிகாரி ஒருவரில் 'அந்திரெக்ஸின்' தாக்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

ஏ.பி.ஸி. தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிபுரியும் தயாரிப்பாளர் ஒருவருடன் அந்த அலுவலகத்துக்கு வந்திருந்த அவரது ஏழு மாத வயதுடைய குழந்தை ஒன்றும் 'அந்திரெக்ஸ்' தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளது.

நியூயோர்க்கில் உள்ள சி.பி.எஸ். தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிபுரிந்த பெண் ஒருவருக்கும் இந்தக் கிருமி தாக்கியுள்ளது.

நியூயோர்க்கில் உள்ள தபால் ஊழியர் ஒருவரும் இதன் தாக்கத்துக்கு உள்ளானார்.

இரு ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களுக்கும், பொலீஸார் ஒருவருக்கும், அமெரிக்கத் தகவல் திணைக்களப் பணியாளர்கள் ஆறு பேருக்கும், வாஷிங்ரனில் உள்ள செனட் அலுவலகத்தில் பணியாற்றும் 31 பேருக்கும் 'அந்திரெக்ஸ்' தொற்று இருப்பதற்கு சாதகமான அறிகுறிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

'அந்திரெக்ஸ்' கிருமிகள் தபால்கள் மூலமே அமெரிக்காவுக்குள் பரப்பப்பட்டன என்பதை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். இதற்கும் வெளிநாட்டுத் தீவிரவாதிகளுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதற்கான ஆதாரங்கள் எவையும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

தபால் மூலம் 'அந்திரெக்ஸ்' கிருமிகள் பரப்பப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து ஐரோப்பிய நாடுகள் முழுவதும் 'அந்திரெக்ஸ்' பீதி ஏற்பட்டுள்ளது. பிரிட்டன் உட்பட ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் தபால்களில் 'அந்திரெக்ஸ்' கிருமிகள் இருக்கின்றனவா என்று தீவிர சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மொஸ்கோவும் தீவிரவாதிகளால் தனது நாட்டில் 'அந்திரெக்ஸ்' பரப்பப்படலாம் என்ற அச்சம் காரணமாக முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தியாவையும் 'அந்திரெக்ஸ்' பீதி தாக்கியுள்ளது.

புதுடில்லியில் 'யுனிசெவ்' நிறுவனம் உட்பட நான்கு நிறுவனங்களுக்கு

உலக அரங்கில்

வந்த கடிதங்களில் மர்மமான பொருள் காணப்பட்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. அந்த மர்மப் பொருள் 'அந்திரெக்ஸாக' இருக்கலாம் என்ற பீதி காரணமாக கடிதங்கள் உடனடியாக இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டன.

சென்னை விமான நிலையத்திலும் மர்மப் பார்ஸல் ஒன்றால் நேற்று பரபரப்பு ஏற்பட்டது. அந்தப் பார்ஸலில் மர்மமான, வெள்ளை நிற மா போன்ற பொருள் காணப்பட்டதை அடுத்து அங்கும் 'அந்திரெக்ஸ்' பீதி எழுந்தது. உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்த பகுப்பாய்வாளர்கள் நடத்திய ஆரம்ப பரிசோதனைகளில்



கடிதங்களில் 'அந்திரெக்ஸ்' கிருமி இருக்கிறதா எனச் சோதனை இடப்படுகிறது.

அது 'அந்திரெக்ஸ்' அல்ல என்பது கண்டுபிடிக்கப்பட்டது. (ம)

## பின்லேடனின் சகாவுக்கு ஆயுள்தண்டனை

நியூயோர்க்,ஒக்.20

1998ஆம் ஆண்டு தன்ஸானியா, கென்யா நாடுகளின் தலைநகரங்களான தாருஸ்ஸலாம், நைரோபி ஆகிய இடங்களில் இருந்த அமெரிக்கத் தூதரகங்கள் மீது இடம்பெற்ற தீவிரவாதிகளின் தாக்குதல்களுடன் தொடர்புபட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒஸாமா பின்லேடனின் முன்னாள் பிரத்தியேகச் செயலாளர் வஜி அல் ஹக்கீல் என்பவருக்கு அமெரிக்க நீதிமன்றம் ஒன்று ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

1998ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 7ஆம் திகதி அமெரிக்கத் தூதரகங்கள் மீதான தாக்குதல்கள் இடம்பெற்றபோது ஹக்கீல் அவரது மனைவியுடன் அமெரிக்காவில் வசித்து வந்தார்.

குறிப்பிட்ட தாக்குதலில் அவர் நேரடியாகப் பங்குகொள்ளாவிட்டாலும் தாக்குதல் திட்டத்திற்கு அவரே பொறுப்பு ஏற்றிருந்ததாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவருக்கு மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் அமெரிக்கர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்திருந்தனர். தாக்குதலை நடத்திய சந்தேகநபர்களின் பட்டியலில் ஒஸாமா பின்லேடனே முதன்மையானவராக இன்னமும் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-10)

## மக்களுக்கு இழப்பு ஏற்பட்டாலும் இலக்குகள் மாற்றப்படமாட்டா!

### அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்



நியூயோர்க்,ஒக்.20

"ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா மேற்கொண்டு வரும் தாக்குதல்களில் பொதுமக்கள் உயிரிழப்பதாகவும், காயமடைவதாகவும் செய்திகள் வெளியாகின்றபோதும் ஏற்கனவே திட்டமிட்டபடி இனங்காணப்பட்ட இடங்கள் மீதான தாக்குதல்களை அமெரிக்கா மாற்றிக்கொள்ளாது"

- இவ்வாறு அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் றொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.

கடந்த 13 நாள்களாக இடம்பெற்ற அமெரிக்கத் தாக்குதல்களில் 600 முதல் 900 வரையான பொதுமக்கள் உயிரிழந்ததாக தலிபான் பேச்சாளர் அப்துல் ஹைமூட் மைன் தெரிவித்துள்ளமை தொடர்பாக கருத்துக் கேட்டபோதே றொனால்ட் ரம்ஸ்பீல்ட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்கா தாக்குதல் நடத்துவதற்காக தலிபான்களின் பயிற்சி முகாம்கள், பதுங்குமிடங்கள், ஆயுதக் களஞ்சியங்கள் மற்றும் அவர்களின் கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த இடங்கள் என்பவற்றையே தேர்ந்தெடுத்துள்ளது. இத்தகைய இடங்களில் இருந்து தூரவிலகி இருப்பதன் மூலம் பொதுமக்கள் தமது இழப்புக்களைத் தவிர்த்துக்கொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

## தீவிரவாதத்தின் மிகமோசமான செயல் அமெ. மீதான 'அந்திரெக்ஸ்' தாக்குதல்

### லிபியத் தலைவர் கடாபி கண்டனம்

கெய்ரோ,ஒக்.20

அமெரிக்கா மீது 'அந்திரெக்ஸ்' கிருமித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை பயங்கரவாதத்தின் மிக மோசமான செயல் என்று லிபியத் தலைவர் கேணல் கடாபி கூறியுள்ளார்.

பயங்கரவாதிகள் இவ்வாறான இரசாயனத் தாக்குதல்களை நடத்தக்கூடிய அபாயகரமான நிலையை எதிர்கொள்ள சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் உலகத் தலைவர்களிடம் கேட்டுள்ளார்.

"உண்மையான பயங்கரவாதத்தை இப்போதே எதிர்கொள்கின்றோம். பேரழிவை ஏற்படுத்தக்கூடிய மிக மோசமான ஆயுதம் 'அந்திரெக்ஸ்' தாக்குதலாகும்.

"எவ்வாறான பகை உணர்ச்சி இருப்பினும் சக மனிதர்கள் மீது இவ்வாறான இரசாயனத் தாக்குதல்களை நடத்துவது கோழைத்தனமும் பொறுப்பற்ற செயலுமாகும். இதனால் மனித சமூகம் முழுவதுமே ஆபத்தை எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டுள்ளது"

- என்று கேணல் கடாபி மேலும் சொன்னார்.

அமெரிக்காவின் செனட் அலுவலகத்தில் பணிபுரிந்த 31 பேருக்கு 'அந்திரெக்ஸ்' கிருமித் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பயங்கரவாதிகளே இந்த 'அந்திரெக்ஸ்' தாக்குதல்களை நடத்தியிருக்கலாம் என்ற சந்தேகம் வலுத்து வருகின்றது. முன்னர் அமெரிக்காவின் இரசாயன உற்பத்தி நிறுவனம் ஒன்றில் இருந்தே 'அந்திரெக்ஸ்' கிருமி பரவி இருக்கலாம் என்று கருதப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 3 லட்சம் இறாத்தலுக்கு மேற்பட்ட குண்டுகள் ஆப்கான் மீது வீசப்பட்டன

### அமெரிக்க அதிகாரி தகவல்

நியூயோர்க்,ஒக்.20

கடந்த 11ஆம் திகதி ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல்களை அமெரிக்கா ஆரம்பித்த பின்னர் கார்ஸ வின்சன் விமானந்தாங்கிக் கப்பலில் இருந்து சென்று ஆப்கான் மீது தாக்குதல் நடத்திய விமானங்கள் மட்டும் அந்த நாட்டின் மீது 3 லட்சம் இறாத்தல் நிறையுடைய குண்டுகளை வீசியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

"முதல்நாள் தாக்குதல் நடத்தச் சென்ற அமெரிக்க விமானங்கள் மீது தலிபான்கள் 10 நிலைகளில் இருந்து விமான எதிர்ப்புப் பீரங்கிகள் மூலம் எதிர்த் தாக்குதல்கள் நடத்தினர். அந்த நிலைகளில் பல பின்னர் குண்டுத் தாக்குதல்களால் நிர்மூலமாக்கப்பட்டு விட்டன. தற்போது ஓரிரு விமான எதிர்ப்புப் பீரங்கிகளை மட்டும் வைத்தே தலிபான்கள் எதிர்த் தாக்குதல் நடத்திவருகின்றனர். அவற்றால் அமெரிக்க விமானங்களுக்குப் பெருமளவில் அச்சுறுத்தல்கள் இல்லை."

- இவ்வாறு கார்ஸ் வின்சன் விமானந்தாங்கிக் கப்பலின் அதிகாரி ரியல் அட்மிரல் டொம் ஸரீபர் கூறியுள்ளார்.

(ம-10)



ஆப்கான் மீது தாக்குதல் நடத்தத் தயாராகிக்கொண்டிருக்கும் அமெரிக்க விமானிகள்.

## சோமாலியா போன்று ஆப்கனிலும் அமெரிக்கரைக் கொன்று குவிப்போம்!

### 'அல்கெய்டா' அமைப்பு சூளுரை

இஸ்லாமாபாத்,ஒக்.20

ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல்களை அமெரிக்கா உடனடியாக நிறுத்தாவிட்டால் சோமாலியாவில் கொன்று குவித்தது போன்று ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கப் படையினரைக் கொன்று குவிப்போம்.

- இவ்வாறு சூளுரைத்துள்ளது ஒஸமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பு.

அமெரிக்கப் படையினர் கந்தகார் நகரில் தரையிறங்கியுள்ளதாகச் செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து அல்கெய்டாவின் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

இதேவேளை - கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்க விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதல்களில் பின்லேடனின் மூத்த சகாவும் அல்கெய்டா அமைப்பின் முக்கிய தளபதிகளில் ஒருவருமான அபூபக்கீஸ் அல் மஷரி கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எகிப்து நாட்டைச் சேர்ந்த அல் மஷரி, அல்கெய்டா அமைப்பு நடத்தியது எனச் சந்தேகிக்கப்படும் பல்வேறு பயங்கரவாதத் தாக்குதல்களுக்கான திட்டங்களை வகுத்தவர் என்றும் கூறப்படுகின்றது.

எனினும் அல் மஷரி உயிரிழந்ததை அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் றொனால்ட் ரம்ஸ்பீல்ட் உறுதிப்படுத்தவில்லை.

# நிவாரண அரிசி தொடர்பாக கூட்டுறவு ஆணையர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.20

இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணமாக வழங்குவதற்காக ப.நோ.கூ.சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்ட பெருமளவு அரிசி மானிப்பாய்ப் பகுதியில் தனியாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது தொடர்பாக —

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் செய்திக்குறிப்பு ஒன்றை விடுத்திருக்கிறார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

14-10-2001 ஆம் திகதிய பத்திரிகையில் மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிவாரண அரிசி சம்பந்தமான செய்தியினைத் தொடர்ந்து என்னால் மேற்கொள்ளப்பட்டபரிசோதனையின் போது குறிப்பிட்ட மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் இருந்து சம்பந்தப்பட்ட அரிசி எதுவும் தவறான வழியில் விநியோகிக்கப்படவில்லை என்பதனை உறுதி செய்துகொண்டேன். நிவாரண விநியோகம் சம்பந்தமாக ஏற்கனவே பின்வரும் நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

அவ்வப் பகுதி பிரதேச செயலர்களினால் வழங்கப்படும் நிவாரணம் பெறுவோரின் பட்டியல்கள், உணவு முத்திரை ஆகியவற்றின் மொத்தத் தேவைகளுக்கு அமைவாக களஞ்சியத்திலிருந்து கிளைகளுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இப்பொருள்கள் பட்டியலுக்கோ அன்றி முத்திரைக்கோ விநியோகம் செய்யப்பட்டபின் இருப்பில் உள்ள பொருள் விவரம் தங்கள் தலைமைக் காரியாலயத்துக்கு கிளை முகாமையாளர்களினால் வெளிப்படுத்தப்படுகிறது.

இந்நிலையில் சங்கத்திலோ, சங்கக் கிளைகளிலோ மேலதிகமாக நிவாரணப் பொருள்கள் இருப்பில் வைத்திருப்பதற்கு எந்தவிதமான ஏற்பாடுகளும் இல்லை என்பதனை அறியத்தருகின்றேன் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## பிற்போடப்பட்டுள்ளது

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினால் இன்று (20—10—2001) சனிக்கிழமை குலுக்கல் நடத்துவதற்கெனத் திட்டமிடப்பட்டிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இதற்கான குலுக்கல் திகதியானது பத்திரிகை வாயிலாகப் பின்னர் அறிவிக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

செயலாளர்.

(93635)

## வெளிவந்துவிட்டன

A/L அளவையியல், G. A. Q. மெய்யியல் மாணவர்களுக்குரியவை.

## மாதிரி வினாவிடை

ஆசிரியர்!- வே. யுகபாலசிங்கம்

★ வென்பட வரைமுறை—10/-ரூபா
★ அறுதி நியாயத்தொடை—5/-ரூபா
★ விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும்—20/-ரூபா

கிடைக்குமிடங்கள்:-
பட்டப்படிப்புகள் கல்லூரி
யாழ்ப்பாணக்கல்லூரி—வர்த்தகவங்கிக்கருகில்
பூபாலசிங்கம் புத்தகசாலை. (93632)

# மரண அறிவித்தல்கள்

## கதிர்காமு சண்முகம்

அல்லையம்பதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு சண்முகம் நேற்று (19 – 10 – 2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், சாந்தகுமாரி, செந்தூராசா, உதயராசா, நேசராசா, வசந்தராசா, உதயராணி, சாந்தரூபி, ஆனந்தராசா ஆகியோரின் தகப்பனாரும், குலசேகரம், பத்மாவதி, புஸ்பராணி, பவளநாயகி, லதா, தவச்செல்வம், இராசலிங்கம், ஹேமலதா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20 – 10 – 2001) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
ச. நேசராசா
(மகன்)

அல்லையம்பதி,
துன்னாலை,
கரவெட்டி.

(93637)

## முருகேசு கந்தசாமி (ஞானியார்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கந்தசாமி (ஞானியார்) 18-10-2001 வியாழக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் இளைப்பாறிய சுகாதார அத்தியட்சகரும், கிளிநொச்சி வயோதிப ஆச்சிரம முதல்வரும் ஆவார்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கலா சிறிதரன்
(மருமகன்)

புதிய செம்மணி வீதிச் சந்தி,
நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு.

(93636)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

★ யாழ். புனித யோசேவ் வித்தி. எதிர் நாவாந்துறை றோ. க. வித்தி.

★ உரும்பிராய் இந்து எதிர் பெரியபுலம் ம.வி.

**18 வயதுப் பிரிவு**

★ உரும்பிராய் இந்து எதிர் யாழ்.புனித யோசேவ் வித்தி.

பிற்பகல் 2.00 மணி முதல் நடைபெறும் ஆட்டங்கள்:-

**16 வயதுப் பிரிவு**

யாழ். புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை எதிர் கொக்குவில் இந்து.

**18 வயதுப் பிரிவு**

★ யாழ். மத்திய கல்லூரி எதிர் கொக்குவில் இந்து.

★ புத்தூர் சோமஸ்கந்தா எதிர் யாழ். புனித சாள்ஸ் ம.வி. (உ-86-51-)

* * *

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கால் இறுதி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

காலை 8.30 மணிக்கு இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு;-

**16 வயதுப் பிரிவு**

★ வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

★ வசாவிளான் ம. ம. வி. எதிர்தெல்லிப்பழைமகாஜனா

**18 வயதுப் பிரிவு**

★ வசாவிளான் ம. ம. வி. எதிர் ஸ்கந்தவரோதயா.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம்:-

**16 வயதுப் பிரிவு**

★ மூளாய் சைவப்பிரகாச வித்தி. எதிர் இளவாலை மெய்கண்டான் வித்தி.

**18 வயதுப் பிரிவு**

★ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி. எதிர் தெல்லிப்பழை யூனியன்.

★ ஸ்கந்தவரோதயா மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம்:

**16 வயதுப் பிரிவு**

★ மானிப்பாய் இந்து எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

**18 வயதுப் பிரிவு**

★ சுன்னாகம் மயிலணி சைவ மகாஜன வித்தி. எதிர் சண்டிலிப்பாய் இந்து.

★ மானிப்பாய் இந்து. எதிர் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி. (உ-86)

## கலந்துரையாடல்

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் நிவாரண விநியோகம் சம்பந்தமான அவசர கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெறும் என்று மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் மற்றும் பொது முகாமையாளர்களை கலந்துகொள்ளுமாறு ஆணையாளர் கேட்டுள்ளார். (ஐ-17)

## சாரணர் கூட்டம்

கிளிநொச்சி சாரண மாவட்டத்தின் சாரணத் தலைவர்கள் மற்றும் குருளைச் சாரணத் தலைவிகளுக்கான மாதாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு மேற்குறிப்பிட்ட அனைவரையும் சமுகமளிக்குமாறு உதவி மாவட்ட ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

## இலங்கை வங்கி பரீட்சை

இலங்கை வங்கியின் பயிலுநர் உதவி அலுவலர் தேர்வுக்கான பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற இருக்கிறது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு வடபிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# 14 ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ். போதனாவைத்திய சாலையில் 1987ஆம் ஆண்டு கடமை நேரத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட ஊழியர்களின் 14 ஆவது நினைவு அஞ்சலி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை வைத்திய சாலையில் நடைபெறும்.

டாக்டர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் உட்பட 21 பேர் இச்சம்பவத்தில் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

1987 ஒக்ரோபர் 21 ஆம் திகதி இந்திய அமைதிப் படையினரால் கொல்லப்பட்ட இந்த 21 ஊழியர்களின் நினைவு நிகழ்வில் ஊழியர்களின் திருவுருவப்படங்களுக்கு 21 தீபம் ஏற்றி அஞ்சலி செய்யப்படும்.

இவர்களின் ஆத்ம சாந்திக்காக அற்றைய தினம் காலை ஆஸ்பத்திரி இந்து கிறிஸ்தவ ஆலயங்களில் ஆத்மசாந்திப் பூசை நடைபெறும். (க-15-139)

## யாழ். லயன்ஸ் கழகம்

நடத்தும்

## கண் பரிசோதனையும் பொது வைத்திய முகாமும்

இடம்: யாழ். நாவாந்துறை கத்தோலிக்க வித்தியாலயம்

காலம்: நாளை (21-10-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணி


கண் பரிசோதனை P. J. பெர்ணான்டோ ஸ்தாபனத்தாரால் மேற்கொள்ளப்படும்.

பொது வைத்திய பரிசோதனை யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களாலும் பல்கலைக்கழக வைத்திய பீட மாணவர்களாலும் நடத்தப்படும்.

அனைவரும் கலந்து பயனடைவீர்.

(93684) யாழ். லயன்ஸ் கழகத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1960 | 2000 |
| — | — |
| 06 | 10 |
| — | — |
| 07 | 31 |

## அமரர் திரவியம் இராசேந்திரம்

சதுர்த்தி திதி: 20-10-2001 சனிக்கிழமை

சோதனையின் விளிம்பினிலே அப்பா நீங்கள் சென்ற பாதையினை, வேல்தனைப் பாய்ச்சிய வேதனையில் எம் விழிகள் நோக்கி நிற்க...
ஐயிரண்டு மாதங்கள் சுமந்து பெற்றவள்
தனியே நின்று தவிக்க.
ஊர் போற்ற உமை வளர்த்த தந்தை மனம்
வெந்து நோக
உடன் பிறந்த சகோதரர்கள் ஓலமிட்டு அழுதிட
அன்பு காட்டி உபசரிக்கும் மனைவியவள்
மனம் கொதிக்க
பாசத்துடன் நீங்கள் வளர்த்த பிள்ளைகள்
மனம் பரிதவிக்க
எம்மைக் கவலையில் ஆழ்த்திவிட்டு — ஆறாத
கண்ணீரில் மிதக்கவிட்டு — காலனவன்
உங்களைக் கவர்ந்து சென்றதேனோ?

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

தந்தை, தாய்,
தர்மராஜா மீனா குடும்பம் (லண்டன்)
சுரேந்திரன் (லண்டன்)
மனைவி, பிள்ளைகள்,
நிர்மலா குடும்பம், சின்னவன் குடும்பம்,
வெள்ளை குடும்பம்.

3ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/18783)

உதயன்

## ஜனநாயக வேடத்துக்கு அங்கீகாரமா?

தமிழ் மக்களின் சுயகௌரவ விடிவுக்காக நிரந்தர சமாதானத்தை உருவாக்கும் நல்நோக்குடைய பொதுக் கருத்துக்களை முன்வைத்து, ஒரே அணியில் - ஒரே குடையின் கீழ் - பொதுத் தேர்தலில் போட்டியிடுமாறு சகல தமிழ் அரசியற் கட்சிகளையும், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களையும் யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் கூட்டாகக் கோரியிருக்கின்றனர்.

தமிழ்ப் பேசும் மக்களின் ஏகோபித்த குரலாக இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது என்று கருதுவதில் தப்பில்லை.

இத்தகைய எழுச்சிக் கோரிக்கை ஒன்றின் பின்புலத்தில்தான் நான்கு தமிழ்க் கட்சிகள் புதிய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கி, ஒரேசின்னத்தில், ஒரு குடையின்கீழ் போட்டியிட முன்வந்திருக்கின்றன.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை - கோரிக்கையை - ஓரளவேனும் செவிமடுத்திருக்கும் இக்கட்சிகள் பாராட்டுக்குரியவைதான். எனினும் மக்களின் எதிர்பார்ப்புப்படி - தேர்தலில் வெற்றிக்கான வியூகத்தை வகுப்பதில் வெற்றிகண்டிருக்கும் இக்கட்சிகளில் ஒன்று அல்லது சில, தமிழ்மக்களின் ஜனநாயகப் பிரதிநிதிகளாகத் தாங்கள் வருவதற்குச் சில அடிப்படைத் தகுதிகளை உடையனவா என்பதை மக்களுக்கு வெளிப்படுத்த, உறுதிப்படுத்தவேண்டிய கட்டாயத்தில் உள்ளன என்பதையும் நாம் குறிப்பிட்டேயாகவேண்டும்.

ஜனநாயக வழிக்குத் திரும்பியதாகத் தங்களைக் கூறிக்கொள்வதன்மூலம் தங்களை ஜனநாயகக் கட்சிகளாகக் காட்டி, ஜனநாயகத் தேர்தலின் கீழான பிரதிநிதித்துவத்தைச் சுருட்டிக்கொள்ள முயலும் இக்கட்சிகள் உண்மையில் தாங்கள் ஜனநாயகக் கட்சிகள்தானா என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்தும் கடப்பாடுடையவை.

ஜனநாயக வழிக்குத் திரும்பியதாகப் பிரகடனப்படுத்திய பின்னரும் இக்கட்சிகள் புரியும் ஜனநாயக விரோத செயற்பாடுகள் நாடறிந்தவை; தமிழ் மக்களை விசனத்துக்கு உட்படுத்துபவை.

பல்வேறு குற்றச்சாட்டுகள் இருந்தாலும் உதாரணத்துக்கு வரி அல்லது கப்பம் பற்றிய விவகாரத்தை மட்டும் எடுத்துக்கொள்வோம்.

ஸ்ரீலங்கா அரசு விதிக்கின்ற - ஸ்ரீலங்காச் சட்டத்தின் கீழான - வரிகளுக்கு அப்பால், தமிழ் மக்கள் செலுத்துகின்ற வரி அல்லது கப்பம் இரண்டுவகைப்படுகின்றது; அதிலும் இரண்டுவகைப் பிரிவினரால் அது அறவிடப்படுகின்றது.

ஒருவகை - தமிழ் மக்கள் உழைத்த, சம்பாதித்த பணத்திலிருந்து அவர்களிடம் அறவிடப்படும் வரி. மற்றையது - தமிழ் மக்களுக்கென வருகின்ற நிதி, பணம், உதவுதொகை அவர்களைச் சென்றடைய முன் இடையிலேயே அரசியற் பிரமுகர்களால் சுருட்டப்படுவது. இதுவும் மக்களிடம் கறக்கப்படும் ஒருவகை வரியே.

இந்தப் பின்னைய - மறைமுக - வரிகளின் அல்லது சுருட்டும் தொகையின் பின்னணி - சூத்திரதாரி - யார் என்பது தமிழ் மக்களுக்குக் குறிப்பாகக் குடாநாட்டு மக்களுக்கு நன்கு தெரியும். அரசாங்க வரவு - செலவுகள் சரியான முறையில் கணக்காய்வு செய்யப்படும் போது இதுபற்றிய அதிர்ச்சித் தகவல்கள் அம்பலமாகும் என எதிர்பார்க்கலாம்.

முதலாவதுவகை வரியை - அதாவது மக்களிடம் நேரடியாக ஏதேனும் முறையில் வரி அறவிடும் நடவடிக்கையில் ஈடுபடுவோர் இரு பிரிவினர்.

ஸ்ரீலங்கா அரசுக்குச் சமாந்தரமாக ஓர் அரசை - நிர்வாகத்தை - நடத்தும் அல்லது நடத்த முயலும் போராளிகள் ஒரு பிரிவினர். இவர்கள் இப்போதைய நிலையில் ஜனநாயகத் தேர்தலில் ஈடுபாடுடையவர்கள் அல்லர்.

மற்றப் பிரிவினர் - தங்களை ஜனநாயகவாதிகளாகக் காட்டிக்கொண்டு வரி, கிஸ்தி, கப்பம் என்று மக்களை வாட்டிவதைப்பவர்கள். இவர்களும் இப்போது தமிழ் மக்களின் விருப்பப்படி உண்மையான ஜனநாயகக் கட்சிகளோடு இணைந்து ஒரு குடையின்கீழ் போட்டியிட முன்வந்திருக்கின்றார்கள்.

தமிழ்மக்களின் ஒற்றுமை என்ற பெயரில் இவர்களையும் ஜனநாயகத் தலைவர்களாகத் தெரிவுசெய்து அனுப்புவதன் மூலம் இவர்களது ஜனநாயக விரோத செயல்களுக்கு தமிழ்மக்களின் ஏகோபித்த அங்கிகாரத்தை வழங்குவதற்கு வழிசெய்யலாமா?

அல்லது அதற்கு முன்னர் தங்களை ஜனநாயகவாதிகளாக முற்றிலும் மாற்றிவிட்டதாக அவர்கள் காட்டுவதற்கு வாய்ப்பளித்து; அதை அவர்கள் உறுதிப்படுத்தியபின்னர், அவர்களை இந்த வழியில் சேர்த்துக்கொள்ளலாமா? சம்பந்தப்பட்ட கட்சிகள் அல்லது முன்னாள் ஆயுதக் குழுக்களின் கவனத்துக்கு இது சமர்ப்பணம்.

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்புக்கு வலியுறுத்துவோரும் இதுகுறித்தும் சிந்திப்பது நல்லது.

## பெய்யெனப் பெய்யும் மழை

இது மன்னர் காலத்துக் கதை... மன்னவன் சபைக்கு வந்ததும் அமைச்சரைக் கேட்கும் முதற்கேள்வி "அமைச்சரே, நாட்டிலே மாதம் மும்மாரி பொழிகிறதா?"

நாட்டிலே மழை பெய்ததா இல்லையா என்பதைக் கூட மன்னர் அமைச்சரைக் கேட்டுத்தான் தெரிந்துகொள்ளவேண்டி இருந்தது. அவ்வளவுக்கு அவர் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்திருப்பாரோ!

அமைச்சர் மட்டும் என்னவாம்? அவரும் இவருக்கு வாய்த்த அமைச்சர் தானே... இருப்பினும் மன்னர் கேட்பார் என்பதற்காக யார் மூலமாவது அவர் அதை அறிந்து வைத்துக்கொண்டு பதிலளிப்பார்.

சரி, அப்படியே மழை பெய்யாவிட்டால், மன்னர் 'மழை பொழியும்படி' ஆணை பிறப்பிப்பாரா? அல்லது அப்படிப் பொழியவைக்கத்தான் அவரால் முடியுமா?

மன்னர் கதை அப்படியே இருக்கட்டும். நம்மால் அது முடியுமா? மழைமேகம் கருக்கட்டும் சமயமாகப் பார்த்து, 'கொடும்பாவி' கட்டி இழுத்து, 'காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த' கதையாக மழை பெய்வதுமுண்டு. அதை வைத்துக்கொண்டு 'பார்த்தீர்களா கொடும்பாவி இழுத்ததும் மழை பெய்துவிட்டது' என்று சொல்வதை நம்பவும் எம்மில் பலர் இருக்கவே செய்கிறார்கள்.

மழை மேகம் கருக்கட்டினால், அது மழையாக இறங்கித்தானாக வேண்டும். இறங்குவதற்குப் 'பஞ்சிப்பட்டால்'... உரிய காலத்தில் பிரசவம் நிகழாவிட்டால் 'சிசேரியன்' என்னும் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையைப் பிறப்பிப்பது போல... சில இரசாயனங்களை வானத்துக்கு அனுப்பி விஞ்ஞான முறையிலும் மழையை வரவழைக்கலாமாம்... (சிசேரியன் முறையில் பிறந்த உலகத்தின் முதற் குழந்தை ஜூலியர் சீசர் தானாம். அதனால்தான் அவருக்கு அந்தப் பெயராம். கத்தி கொண்டு பிறப்பிக்கப்பட்டவர் இறுதியில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டது வேறு கதை...)

இதைவிட, நமது பெண்கள் நினைத்தால் மழையை (கண்ணீர் மழையை அல்ல) வரவழைக்க முடியும் என்றொரு கதையும் இருக்கிறது. அதனைச் சொல்வதற்கு முன்னர், முன்னுரையாகச் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும்.




பெண்களுக்குக் கணவனே கண்கண்ட தெய்வம் என்பார்கள். 'பெண்ணானவள் கணவனை வணங்கி வர வேண்டும், கணவன் ஆண்டவனை வணங்கிவர வேண்டும்' என்றெல்லாம் வாரியார் சொல்லி வருவார். நான் ஆண்களுக்காக வக்காளத்து வாங்குவதாக நினைக்கக் கூடாது... எல்லாம் மழைக்காகத்தான்.

வள்ளுவரும் 'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்கிறார். வேறு தெய்வங்களை வணங்க வேண்டியதில்லை. கண் விழித்ததும் கணவனை வணங்கி எழுபவள் மழையைப் பெய்விக்கும் சக்தி பெற்றிருப்பாளாம். அப்படியானவள் பெய் என்றதும் மழை பெய்யுமாம். (முஸ்லிம் பெண்கள் பள்ளிவாசல்களுக்குப் போவதில்லையாம். அப்படி நான் நமது பெண்களைக் கேட்கவில்லை. நீங்கள் இரண்டையுமே செய்யுங்களேன்... அதுவும் மழைக்காகத்தான்...)

கடவுள் கூட இப்போதெல்லாம் பக்தர்களின் மழை வரத்துக்கு அவ்வளவு மதிப்புக் கொடுப்பதில்லை போலிருக்கிறது... அவரும் நல்ல பிள்ளைக்கு இருக்கப் பார்க்கிறார்... ஒரு குட்டிக்கதை... கண்ணதாசன் சொன்னதாகத் தெரிகிறது...

"ஒரு விவசாயி நெல்லை விதைத்து விட்டு பிள்ளையாரை வணங்கி மழை வரம் கேட்கிறார்.

"ஒரு நாடகத் தயாரிப்பாளர் எக்கச்சக்கமாக நாடக நுழைவுச் சீட்டுக்களை விற்று விட்டு, அவரும் பிள்ளையாரிடம் வரம் கேட்கிறார், மழை வரக்கூடாதென்று!

எது நடந்தாலும் நிச்சயம் நாளைக்குப் பிள்ளையாருக்குப் பரிசாக ஒரு சிதறு தேங்காய் உடைக்கப்படும்."

கணவனை மதிக்கிற பெண்கள் இருக்கும் வரை மழை பெய்யும் -, 'அவள் பெய்யென்றால் மழை பெய்யும்' என்ற வள்ளுவர் வாக்கினை நான் வேறு கூறப்போய் சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்து விட்டேனா? அவர்கள் அப்படிச் சொல்லியும் மழை பெய்யாவிட்டால் அவர்கள் மீது வீணாகச் சந்தேகம் கொள்ள வழியேற்பட்டுவிடுமே -என்பதுதானே உங்கள் கவலை? உங்களுக்கெல்லாம் கைகொடுப்பது போல கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் இந்தக் குறளுக்குப் பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

'தெய்வம் தொழாதவளும் கணவனைத் தொழுதெழுபவளுமான பெண்ணானவள் (கணவனுக்கு) பெய்யெனப் பெய்யும் மழை போன்றவள்' அதாவது அவள் பெய்யென்றதும் மழை பெய்யும் என்பதல்ல. பெய் என்று சொன்னதும் பெய்யும் மழை என்று ஒன்றிருந்தால் எப்படியோ, அப்படி அவனுக்கு அவள் இருப்பாளாம்! எப்படி விளக்கம்?

- சண் அங்கிள்

## நாட்டு நடப்பு

### எங்கே வீரம்?

காளையை அடக்கி அன்று
கன்னியை மணந்தான் காளை
வேழத்தை விரட்டி ஓட்டி
வீரனாய் மணந்தான் பெண்ணை
வாளினை வீசி வென்று
வனிதையை மணந்தான் வீரன்
கோழையாய் அவள் செருப்பைக் காட்ட
கொடுக்கதும் அவிண்டு தொங்க
பாழான பாதணியைக் கண்டு இன்று
பயந்து நீ ஓடலுற்றால்
மாளாத வீரம் மேவ
மங்கை கைகொட்டி சிரிப்பாளன்றோ?

- விகடகவி.

## ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனம் நாளை ஞாயிறன்று வெளியிடப்படும்

கொழும்பு,ஒக்.20

ஐ.தே.கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும கட்சியின் தேசிய மாநாட்டில் வெளியிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கும் பணிகள் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், அவரின் நேரடி மேற்பார்வையில் நடைபெற்று வருவதாகவும் -

தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெற்று அரசமைத்தால் மக்களுக்கு எத்தகைய சலுகைகள் வழங்குவது என்பன தொடர்பான விடயங்கள் அனைத்தும் இந்த விஞ்ஞாபனத்தில் அடங்கும் என்றும்-

ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பொதுமக்கள் எதிர்நோக்கும் வாழ்க்கைச் செலவு உயர்வு, இதற்குக் காரணமான பொருளாதார சுமையைக் குறைத்தல், அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வைக் குறைத்தல், விவசாயிகளுக்கு சலுகைகள், இனப்பிரச்சினைக்குத் தீர்வு, பொருளாதார வளர்ச்சிக்கான வழிமுறைகளுடன் தோட்டத் தொழிலாளர்களுக்கான சலுகைகள் உட்பட பல விடயங்கள் இந்த விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முக்கியமாக பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுகள், பாதாளத்தில் தள்ளப்பட்டுள்ள பொருளாதாரத்தை எவ்வாறு கரை சேர்ப்பது, வர்த்தக சமூகத்தினருக்கான சலுகைகள் என்பன தொடர்பாகவும், வடக்கு - கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாகவும், இதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர் இது குறித்துத் தெரிவிக்கையில் கூறினார். (ஐ-7)

## 22 மாவட்டங்களில் ஜே.வி.பி. போட்டியிடும்

கொழும்பு,ஒக்.20

பொதுத்தேர்தலில் ஜே.வி.பி. 22 மாவட்டங்களில் போட்டியிடும் என்று அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஜே.வி.பி. கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியல் இன்னும் முழுமைப்படுத்தப்படவில்லை. எனினும் 16 மாவட்டங்களில் போட்டியிடும் வேட்பாளர் குழுக்களே இதுவரை தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, நந்தன குணதிலக்க, பிமல் ரத்னாயக்க, சந்திரசேன விஜேசிங்க, நிகால கலப்பத்தி ஆகியோர் முறையே கொழும்பு, களுத்துறை, குருநாகல், காலி, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் போட்டியிடவுள்ளனர்.

தேசியப் பட்டியல் எம்.பி.பதவிகள் அனுர திஸநாயக்கா மற்றும் அஞ்ஞான் உம்மா ஆகியோருக்கு வழங்க தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கில் போட்டியிடும் வேட்பாளர்கள் குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை - என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-7)

## ஆஸ்பத்திரிகள், மருந்தகங்களில் திடீர் சோதனை நடத்தக் குழு!

### சுகாதாரப் பணிப்பாளரால் நியமிப்பு

சண்டிலிப்பாய்,ஒக்.20

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தில் திடீர்ப் பரிசோதனைக் குழு ஒன்று யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளது.

மூவர் அடங்கிய இக்குழு யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகள், அரச மத்திய மருந்தகங்கள் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்கள் ஆகியவற்றில் திடீர்ப் பரிசோதனையை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிராந்தியத்தில் பொதுமக்களுக்கான சுகாதார - வைத்திய சேவைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் உமா சிவபாதசுந்தரம் சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

இந்தத் திடீர் பரிசோதனைக் குழுவின் தலைவராக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கணேஸ்வரராஜாவும், உறுப்பினர்களாக பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சிவலிங்கம், கணக்காளர் கே.தனரஞ்சிதராஜன் ஆகியோரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் ஊழியர்களின் வரவு, சீருடை அணிதல், மேலதிக நேர வேலை, மருந்து விநியோகம், சுகாதார நிலைமை, திணைக்கள வாகனங்களின் நிலை, சமையல் அறையின் நிலைமை ஆகியன உட்பட மற்றும் பல விடயங்கள் தொடர்பாக இக்குழு பரிசோதனைகளை மேற்கொள்ளும். (ஐ-135)

### நாளை

ஐப்பசி 04
ஞாயிற்றுக்கிழமை
திதி : பஞ்சமி
முன்னிரவு 9.07 வரை.
நட்சத்திரம் : கேட்டை
பிற்பகல் 1.30 வரை.
மரணயோகம்
சுபநேரம் : 9.02 - 10.32
ராகுகாலம் : 4.32 - 6.02
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வாழ்நாளில் இனிய பருவம் இளமை. இதை முதுமையில்தான் உணர்கிறோம்.


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



நிலத்தில் மறைந்திருக்கும் ஆபத்தான மிதிவெடிகள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் அவதானம் தேவை.

## 25ஆவது வருட திருமண வாழ்த்து



**அந்தோனிப்பிள்ளை கெலன்ஜெசி (றாஜினி)**
**திருமணவாழ்வில் வெள்ளிவிழாக் காணும்**
**தம்பதியினரை அன்புடன் வாழ்த்துகின்றோம்.**
*77, இராசாவின் தோட்டம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (93611) **- சொல்வேந்தன் குடும்பம்.**

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

மூளாய், பொற்புலம்பதி மகாகாளி அம்பாள் ஆலயத் திருப்பணி புனரமைப்புக்காக ரூபா 2 1/2 லட்சத்தை ஒதுக்கீடு செய்து உதவியவர்களான,

மாண்புமிகு அமைச்சர் **டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும் -

யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உயர்திரு. **கே.வி.குகேந்திரன் (ஜெகன்)** அவர்களுக்கும் -

இந்து கலாசாரப் பொறுப்பாளர் உயர்திரு. **ந.திரிலோகநாதன்** அவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**- நிர்வாகத்தினர்.**
மூளாய் பொற்புலம்பதி மகாகாளி அம்பாள் ஆலயம்.
(93621)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 - 01 - 1946 | 20 - 09 - 2001 |

அரியாலையூர்

## அமரர் குமாரசாமி யோகநாதன்

முப்பதுநாள்கள் முடிவடைந்தாலும் - உயிர் மூச்சாய் இருந்து நம்மைக் காத்தவரே - உங்களை மறக்க முடியாது தவிக்கின்றது நம் நெஞ்சங்கள் - நல் மனிதனாய் வாழ்ந்த உங்களை எவர்தான் மறப்பர்?

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறையருள் வேண்டி நிற்கின்றோம்.*

*இல.8, கனகரட்ணம் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (93600) - குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 - 05 - 1939 | 20 - 10 - 2000 |

## திருமதி லூர்த்தம்மா சிறில்

அன்னையே அன்பில் விளைந்த ஆரமுதே!
தன்னையே தந்து எம்மையே வாழ வைத்த தெய்வமே!
முன்னைய நல்வினைப் பயனே உம்மை நாம் அடைந்தோம்.
பொன்னையே நிகர்த்த மிளிர்வுடன் போற்றி பூசிக்கின்றோம்.

கருணையின் இறைவா உம்மிடம் அழைத்துக் கொண்ட
உம் அடியாள் லூர்த்தம்மாவின் ஆன்மாவுக்கு
நித்திய இளைப்பாற்றியை அளித்து முடிவில்லா
பேரின்ப தரிசனத்தை இரக்கத்தின் ஒளியால் நிரப்பியருளும்.

*ஓராண்டு ஓடி மறைந்தாலும் உங்கள் அன்பும்*
*பாசமும் எம்மனங்களை விட்டு என்றும் அகலாதம்மா!*

தகவல்:
*மடுத்தீன் சிறில்*
*ஆவரங்கால் கிழக்கு,*
*புத்தூர்.*

உங்களின் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.
(93560)

## விதைகள் விநியோக ஆரம்ப விழா

வலிகாமம் தெற்கு,ஒக்.20

வரையறுக்கப்பட்ட விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் உற்பத்தி செய்யப்பட்ட உள்ளூர் மரக்கறி விதைகளான 'சீட்கோ' விதை விநியோக ஆரம்பவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய மண்டபத்தில் முற்பகல் 10.30 மணிக்கு சங்கத் தலைவர் சு.இராசதுரை தலைமையில் இடம்பெறும்.

யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு விதைகள் விநியோகத்தை ஆரம்பித்து வைப்பார்.

யாழ்.கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் விதைகளைப் பெற்றுக்கொள்வார்.

சங்கத்தால் உற்பத்தி செய்யப்பட்ட உள்ளூர் மரக்கறி விதைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்களூடாக தேவையான விவசாயிகளுக்கு வழங்கப்படும் என சங்கத்தின் செயலாளர் தா.பத்திநாதர் தெரிவித்துள்ளார். (ஐ-152)

## மெலிஞ்சிமுனைக்கு விரைவில் மின்சாரம்

ஊர்காவற்றுறை,ஒக்.20

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள மெலிஞ்சிமுனை கிராமத்திற்கு 28 கிலோ வாற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய ஜெனரேட்டர் மூலம் விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

தற்பொழுது மின் இணைப்பு வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ள போதும் ஜெனரேட்டர் பொருத்துவதற்கான பாதுகாப்பு அறை அமைக்கும் வேலைகள் பூர்த்தியடையாததாலேயே மின் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமத்திற்கான மின் விநியோகத்தை ஊர்காவற்றுறை பிரதேச சபையிடம் கையளிப்பது தொடர்பான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பணிகள் அனைத்தும் முடிந்ததும் ஊர்காவற்றுறைக்கும், இக்கிராமத்திற்கும் தினமும் 6 மணித்தியாலங்கள் மின் வழங்கப்படும் எனவும் -

அதிகாலை 5 மணி தொடக்கம் காலை 7 மணி வரையும், மாலை 7 மணி தொடக்கம் இரவு 11 மணி வரையும் முதற்கட்டமாக மின்சாரம் வழங்கப்படும் எனவும் - அவர் தெரிவித்தார். (ம-16)

## பொ.ஐ.மு.வின் தேர்தல் பட்டியல் இன்று வெளியாகும்

கொழும்பு,ஒக்.20

பொ.ஐ.முன்னணியின் பொதுத் தேர்தல் தொடர்பான நியமனப் பத்திரங்கள் இன்று சனிக்கிழமையளவில் தயாராகி விடும் என்று அதன் பொதுச் செயலாளர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க உட்பட பல புதிய முகங்கள் இந்தத் தேர்தலில் களம் இறங்கவுள்ளதாகத் தெரிவித்த பொதுச்செயலாளர் - கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் முதலில் அனுராதபுரத்திலேயே ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ம-10)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

**20.10.2001**

HAPPY BIRTHDAY



***செல்வி கோடீஸ்வரன் ஹனுஜா (HANUYA)***

கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த
**கோடீஸ்வரன் - கௌரிபாலினி தம்பதியினரின்**
செல்வப் புதல்வி **ஹனுஜா**

தனது முதலாவது பிறந்ததினத்தை கோண்டாவில் கிழக்கில் உள்ள இல்லத்தில் இன்று (20.10.2001) சனிக்கிழமை வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றார். ஹனுஜாவை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மாமார், சித்தப்பா, பெரியம்மா, பெரியப்பா, மாமாமார், அத்தைமார், மச்சாள், மச்சிமார் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சகல சௌபாக்கியங்களுடன் நீடூழி வாழ வாழ்த்துகிறார்கள்.

இந்த நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*பலாலி றோட்,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*

ச.கோடீஸ்வரன்
குடும்பத்தினர்.
(93531)

## பரிசளிப்பு விழா - 2001

**யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

*காலம்:-* நாளை (21.10.2001) ஞாயிறு
*நேரம்:-* முற்பகல் 9.00 மணி
*தலைவர்:-* **திருமதி வி.சுகுமாறன்** (அதிபர்)
*பிரதம விருந்தினர்:-* **திரு. சி.சிவராசா**
*(மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் - வடமராட்சி)*
*பரிசில் வழங்கல்:-* **திருமதி ஸ்ரீ.சிவராசா**

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

(93616) **- பாடசாலைச் சமூகம்.**

## தீர்த்த மண்டப அடிக்கல் நடும் வைபவம்

*வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் தீர்த்த மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வானது இன்று (20.10.2001) சனிக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு (புதியநேரம்) நடைபெற இறையருள் கைகூடியுள்ளதால், அத்தருணம் கலந்து சிறப்பிக்குமாறு முருகனடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*இவ்வைபவத்தில் வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திரு.ந. திரிலோகநாதன் JPUM அவர்கள் மண்டபத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்து விழாவைச் சிறப்பிப்பார்கள்.*

(93552) பரிபாலன சபை.

## திருமண மங்கல வாழ்த்து

அன்புடையீர்,

நிகழும் விஷு வருடம் ஐப்பசிமாதம் 4ஆம் நாள் இன்று (20-10-2001) சனிக்கிழமை காலை 11.30 மணிமுதல் 1.30 மணிவரையுள்ள தனுசு லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

திரு.திருமதி துரைரத்தினம் அவர்களின்
திருநிறை செல்வன்
**யோகேஸ்வரன்** (யோகேஸ்)
அவர்களுக்கும்

திரு.திருமதி தவராஜசேகரம் அவர்களின்
திருநிறை செல்வி
**தவச்செல்வி** (ராஜி)
அவர்களுக்கும்

லண்டனில் நடைபெறுகின்ற திருமாங்கல்ய தாரண நிகழ்வுக்கு நல்லாசிகளை வழங்குவதோடு புதுமண மக்களைச் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ வேண்டுமென மனமார வாழ்த்துகின்றோம்.

"புவன வாசா"
மட்டுவில் தெற்கு,
வேரக்கேணி கந்தசாமி கோயிலடி.
(93587)

S.கணவதிப்பிள்ளை (பேரன்),
R.குணராசசேகரம் - பவானி (குடும்பத்தினர்),
K.பஞ்சாட்சரம் - சாந்தி (குடும்பத்தினர்),
K.குலராசசேகரம் - திலகம் (குடும்பத்தினர்).

# ஜி.சீ.ஈ. புதிய பாடத்திட்டத்துக்குரிய மாதிரி வினாத்தாள் கிடைக்கவில்லை

## மாணவர்கள் பாதிப்பு

அச்சுவேலி,ஒக்.20

ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சைக்குரிய புதிய பாடத்திட்ட மாதிரி வினாத்தாள் யாழ்.மாவட்டத்திற்கு வந்து சேரவில்லை. இதனால் எதிர்வரும் டிசெம்பர் மாதம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பரீட்சை வினாத்தாள் மாதிரியை அறிமுகம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

புதிய பாடத்திட்டங்களை அறிமுகப படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் பரீட்சை வினாத்தாள் மாதிரியைப் பரீட்சைத் திணைக்களம் முன்கூட்டியே பாடசாலைகளுக்கு அனுப்பிவைப பதும் -

அந்த மாதிரியைப் பின்பற்றி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பரீட்சை வழிகாட்டல் ஆலோசனைகள், வழிப்படுத்தல்களை மேற்கொள்வதும் -

நடைமுறையாகும்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின்படி முதற் தடவையாகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

புதிய பாடத்திட்டப் பரீட்சையில் வினா மாதிரிகள், உருப்படிகள், பழைய பாடத்திட்ட வடிவமைப்பில் அமையாமல் மாறுபட்ட விதத்தில் அமையும் எனப் பரீட்சைத் திணைக்கள சுற்றறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

புதிய பாடத்திட்டத்திற்குரிய இலவச பாடப்புத்தகங்களில் சில மூன்றாம் தவணையின் போதுதான் யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு வழங்கப் பட்டன.

பாடப்புத்தகங்கள் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் பரீட்சை வினா மாதிரி அமைப்பு தெரியாதநிலை என்பன புதிய பாடத்திட்டத்தில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பெறுபேற்றில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பெற்றோர் கவலைப்படுகின்றனர். (ஐ-11)

## ஊர்காவற்றுறைக்கு 19 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

ஊர்காவற்றுறை,ஒக்.20

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு 2001ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து மொத்தம் 19 லட்சத்து 40 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டில் இருந்து சனசமூக நிலையங்களைப் புனரமைப்பதற்கு 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், ஆலயங்களைப் புனரமைப்பதற்கு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், நீர் விநியோகத் திட்டத்திறகு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு 4லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், தென்னங்கன்று விநியோகத்திற்கு 90 ஆயிரம் ரூபாவும், திறந்த வெளி அரங்கு புனரமைப்பிற்கு 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-16)

## தமிழகத்திலிருந்து முருகன் சிலை

சண்டிலிப்பாய்,ஒக்.20

சித்தன்கேணி மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்திலுள்ள முருகன் கோயிலில் பிரதிஷ்டை செய்வதற்காக தமிழ்நாட்டிலுள்ள மாமல்லபுரம் சிற்பக் கலைக்கூடத்தில் உருவாக்கப்பட்ட முருகன் விக்கிரகம் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலனசபை இந்த விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. (ஐ-135)

## ஊர்காவற்றுறையில் கடற்றொழில் கூ.சங்கங்களில் கணக்காய்வு செய்ய நடவடிக்கை

ஊர்காவற்றுறை,ஒக்.20

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பதிவு செய்யப் பட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பல இதுவரை கணக்காய்வு செய்யப்படாதுள்ளதனால் இக் கூட்டுறவுச் சங்கங்களைக் கணக்காயவு செய்துதரும் வண்ணம கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரைக் (கணக்காய்வு) கேட்பதென ஊர்காவற்றுறைப் பிரதேச கடற்றொழில் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் ஊர்காவற்றறைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கடற்றொழில் குழுக் கூட்டத்தில் கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கிணங்க மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தம்பாட்டி, எழுவைதீவு, அனலைதீவு, மருதபுரம், கல்லந்தாழ்வு, அம்பாள், சிவகெளரி, வியாவில் ஆகிய கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களே இவ்வாறு கணக்காய்வுக்கு உட் படுத்தவேண்டி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-16)

# கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் கூ.சங்க உறுப்பினர்களும் சேர்ப்பு!

அரியாலை,ஒக்.20

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களின் நன்மைகருதி கமத்தொழில் காப்புறுதிச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் அவர்களையும் இணைத்துக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூட்டுறவு, அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனை, தென்னை வளம்) சு.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்த உறுப்பினர்களின் கட்டாயச் சேமிப்புத் தொகையிலிருந்து கமத்தொழில் காப்புறுதிச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன் புரித் திட்டத்திற்கு கட்டணத்தை மொத்தமாகச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தில் இணைவதற்கு கூடுதலான உறுப்பினர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஐ-17)



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசக் கிளைகள் ஒன்றிணைந்து பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடத்திய உலகாசிரியர் தின விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க உப தலைவர்களில் ஒருவரும், யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபருமான திருமதி ஈஸ்வரி ஜெயராஜா, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி அன்னபாக்கியம் கனகரத்தினத்துக்கு இ.த.ஆ.சங்கக் கொடியை அணிவிப்பதை முதல் படத்தில் காணலாம்.

வடமராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் சி.சிவராசா, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் ஆங்கில விரிவுரையாளர் ச.விநாயகமூர்த்தி ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களில் காணலாம். *(படங்கள்: வடமராட்சி, பருத்தித்துறைச் செய்தியாளர்கள்)*

## வாவியில் மீன்பிடிக்கத் தடை விதிப்பு

மட்டக்களப்பு,ஒக்.20

மட்டக்களப்பு மாவட்டத்தின் சத்துருக்கொண்டான், மைலம்பாவெளி மற்றும் தன்னாமுனைப் பிரதேசங்களில் வாவியில் மீன்பிடிப்பதற்கு கடந்த சில தினங்களாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த படகுகளைப் படையினர் எடுத்துச்சென்று சத்துருக்கொண்டான், மைலம்பாவெளி இராணுவ முகாம்களுககு அருகே நிறுத்திவைத்துள்ளனர்.

வாவியைக் கடந்து வருகின்ற விடுதலைப் புலிகள் பிரதான வீதியால் சென்றுவரும் வாகனங்களைச் சோதனையிடுவதாகத் தகவல்கள் கிடைத்ததை அடுத்தே வாவியில் மீன்பிடிக்கத் தடை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சந்திவெளி, கிரான் மற்றும் கிண்ணையடித்துறை வழியாகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு மக்கள் சென்று வரவும் படையினர் தடைவிதித்துள்ளனர். (ம-10)

# எழுவைதீவுப் பகுதி மக்களுக்கு சுகாதார அறிவுறுத்தல்கள்

ஊர்காவற்றுறை,ஒக்.20

எழுவைதீவுப் பிரதேசத்தில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பலர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதை அடுத்து இப்பகுதி மக்கள் கொதித்தாறிய நீரைப் பருகுவதுடன், தனிநபர் சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளுமாறு எழுவைதீவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்பகுதியில் நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்கள் பலர் யாழ்.போதனா வைத்தியசாலையிலும், தனியார் மருத்துவ நிலையங்களிலும் சிகிச்சை பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் பலர் கடற்கரைகளுக்கு சமீபமாகக் குழிகளைத் தோண்டிக் குடிதண்ணீரைப் பெற்று வருவதால் இதற்கு குளோரின் இட முடியாதுள்ளதாகவும் -

எனவே பொதுமக்கள் இயன்ற வரை கிணற்று நீரையே குடிதண்ணீராகப் பயன்படுத்துமாறும் -

சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

அத்துடன் எழுவைதீவு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரதி வியாழக்கிழமைகளில் மருத்துவ சேவைகள் நடைபெறுகின்றன. எனினும் இதுவும் சீரற்ற முறையிலேயே நடைபெறுவதால் இப்பகுதி மக்கள் அடிப்படை சுகாதார வசதிகளின்றி பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-16)

## இந்து சமயபாட இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.20

அறநெறிப் பாடசாலைகளின் 2001ஆம் ஆண்டுக்கான இந்துசமய பாட இறுதிப் பரீட்சை எதிர்வரும் 27ஆம், 28ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் தோற்றவுள்ளோருக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-10)

## மானிப்பாய் சுகாதாரப் பிரிவில் நுளம்பு வலைகளுக்கு மருந்து தோய்க்க வசதி

சண்டிலிப்பாய்,ஒக்.20

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நுளம்பு வலைகளுக்கு பேமற்றின் (Permethrin) எனப்படும் கிருமிநாசனி மருந்து தோய்த்துக் கொடுக்கும் பணி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

முன்னர் சுகாதாரத் திணைக்களத்தில் நுளம்பு வலைகளைப் பெற்றவர்களுக்கும் மற்றும் தனிப்பட்டவர்களின் நுளம்பு வலைகளுக்கும் இம்மாதம் 15ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 19ஆம் திகதிவரை மருந்து தோய்த்துக் கொடுக்கப்படும் என்று மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

தத்தமது பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகருடன் தொடர்புகொண்டு இது பற்றிய முழு விவரங்களையும் அறிந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## பரிசளிப்பு விழாவும் கட்டட திறப்பும்

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு அதிபர் க.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

உடுவில் கல்வி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி பொன்.இராமநாதன், சாயி நிறுவன ஆன்மீக இணைப்பாளர் எஸ்.ஆர்.சரவணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள்.

இதேவேளை -

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் ஆதரவுடன் ஐந்தரை லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட புதிய கட்டடம் இன்று சனிக்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்படவுள்ளது.

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஐந்து லட்சம் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்ட செயற் பாட்டறையும் இன்று திறந்துவைக் கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடங்களைத் திறந்துவைப்பார்.

பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த.தேவராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள் வார்.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரக பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள் ளனர். (ஐ-152)

## முன்பள்ளி ஆசிரியருக்கு கொடுப்பனவு

ஊர்காவற்றுறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள முன்பள்ளி நிலையங்களில் கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஜுன், ஜுலை, ஓகஸ்ட் மாதங்களுக்கான கொடுப்பனவு ஊர்காவற்றுறைப் பிரதேச தலைமை அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகிறது.

இக்கொடுப்பனவு தெரிவுசெய்யப்பட்ட 51 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் இதுவரை இக்கொடுப்பனவைப் பெறாதவர்கள் உடன் பெற்றுக் கொள்ளுமாறும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.எஸ். பகீரதன் அறிவித்துள்ளார். (ம-16)

# புதைக்கப்பட்ட நிறைமாத சிசு புலோலி தெற்கில் கண்டுபிடிப்பு!

நெல்லியடி,ஒக்.20

நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த நிறைமாத சிசு ஒன்றின் சடலம் பருத்தித்துறை பொலீஸாரினால் மீட்கப் பட்டுள்ளது.

புலோலி தெற்கு சின்னத்தாய் பிள்ளையார் கோயிலடிப் பகுதியில் உள்ள தென்னந்தோட்டத்திலேயே இச்சடலம் கடந்த வியாழக்கிழமை காலை மீட்கப்பட்டு, மந்திகை மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப பட்டது.

பிரேத பரிசோதனையை மேற்கொண்ட பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை, இச் சிசுவின் சடலத்தில், உறுப்புப் பகுதி சிதைவடைந்து இருப்பதனால், இச்சிசு ஆணா, பெண்ணா என அறிய முடியாதிருப்பதாகத் தெரிவித்தார்.

மரண விசாரணையின் பின்னர் சடலம் அரச செலவில் மந்திகை கருகம்பன் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. (ஐ-109)

# நிவாரணப் பொருள்களை உரியவருக்கே வழங்க வேண்டும்

## ஆணையாளர் அறிவுறுத்து

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இடம்பெயர்ந்த மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுவரும் நிவாரணப் பொருள்களை அந்தந்தக் குடும்ப உறுப்பினர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தி வழங்க வேண்டும்.

அவ்வாறு உரியவருக்கு பொருள்களை வழங்காது வேறு எவருக்கும் வழங்கி, திடீர் பரிசோதனையின் போது அது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட சங்கக் கிளைமுகாமையாளர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்கண்டவாறு எச்சரித்திருக்கிறார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே.சண்முகநாதன்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் நிவாரணம் பெறுவதற்கு குடும்ப உறுப்பினர்களை விட அதில் சம்பந்தப்படாதவர்களும் நிவாரணம் பெற்றுச் செல்வதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைகேடான செயலைத் தவிர்க்கும் பொருட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உணவு முத்திரைக்குரிய குடும்ப உறுப்பினர்களின அடையாளத்தை உறுதிப்படுத்தி அவர்களுக்கே பொருள்களை வழங்க வேண்டும் என்றும் - உதவி ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ-17)

## தவறவிடப்பட்ட ஆபரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ். போதனா வைத்தியசாலையில் தவறவிடப்பட்ட தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு, தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் -

உரியவர்கள் அடையாளம் காட்டிப்பெற்றுக் கொள்ளுமாறும் - வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஓ)

## நடைபாதை அமைப்பு

அரியாலை,ஒக்.20

யாழ்.கோட்டை முனீஸ்வரன் ஆலயத்திற்குச் செல்வதற்கான நடைபாதை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

ஆலயத்திற்கு முன்பாகச் செல்லும் கே.கே.எஸ். வீதியில் இருந்து ஆலயத்தைச் சென்றடையும் இந்த நடைபாதை கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுவருகின்றது. (ஐ-17)

# கலை, கைப்பணி கண்காட்சி

சண்டிலிப்பாய், ஒக்.20

சாகித்திய விழாவை முன்னிட்டு சங்கானை பிரதேச செயலகம் வலி. மேற்கு கலாசாரப் பேரவையின் அனுசரணையுடன் நடத்தும் கலை, கைப்பணி, அரும்பொருள், ஓவியக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் திங்கட்கிழமையும நடைபெறவுள்ளது.

சங்கானை (வலிமேற்கு) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் பிரதமவிருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பி.புஸ்பரத்தினம், யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைப்பீட பீடாதிபதி திருமதி. நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (ஐ-135)

## கூடைப்பந்தாட்டம்

பாடசாலைகளின் 17வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திவரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடைபெறும்.

பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் அணியும் -

ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து யாழ்.பரியோவான் கல்லூரியும் விளையாடவுள்ளன. (உ)


# தேசிய போலியோ தடை மருந்து கொடுக்கும் தினம் - 20.10.2001

## யாழ்.மாவட்டம்

போலியோ நோயை முற்றாக இந்நாட்டிலிருந்து ஒழிக்க கடந்த ஆறுவருடமாக போலியோ சொட்டுமருந்து கொடுக்கப்பட்டு வருகின்றது. தென்னிலங்கையில் கூடிய முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் வட, கிழக்கு மாகாணங்களில் கீழ்க் குறிப்பிட்ட காரணங்களால் இதில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படவில்லை.

1. காலத்திற்குக் காலம் மக்கள் இடம்பெயர்வதால் பிள்ளைகளைத் தேடிக் கண்டுபிடித்து மருந்து கொடுப்பதில் உள்ள சிரமம்.
2. இடம்பெயர்வு காரணமாக மக்கள் குறிப்பிட்ட இடங்களில் நெரிசலாக வாழ்கின்றபடியால் சுகாதாரத்தைப் பேணுவது குறைவாகக் காணப்படுகின்றது.

இக்காரணங்களால் வட, கிழக்கில் இந்நோய் மறைமுகமாக இருக்கலாமென ஐயப்பாடு உண்டு. எனவேதான் இவ்வருடமும் செப்ரெம்பர் 22 ஆம் திகதி முதலாம் சுற்று சொட்டுமருந்து வழங்கப்பட்டது. ஒக்ரோபர் 20 ஆம் திகதி இரண்டாம் சுற்று சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது. செப்ரெம்பர் 22 ஆம் திகதி சொட்டு மருந்து பெற்றுக்கொண்ட சகல குழந்தைகளும் மீண்டும் ஒக்ரோபர் 20 ஆம் திகதியும் இச்சொட்டுமருந்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கீழ்க் குறிப்பிட்ட நிலையங்களில் போலியோத் தடை மருந்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாகாண பிரதிப் பணிப்பாளர் - சுகாதார சேவைகள் - மேற்கொண்டுள்ளார். இந்நிலையங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை தடை மருந்து வழங்கப்படும். 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு முன்பு பல தடவைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் இம்முறையும் இது கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. நூற்றுக்கு நூறு வீதமான பிள்ளைகளுக்குத் தடை மருந்து கொடுப்பதன் மூலம் இக்கொடிய நோய் எமது பிள்ளைகளுக்கு வராமல் தடுப்பது மட்டுமல்லாது எம் நாட்டிலிருந்தே முற்றாக இந்நோயை ஒழித்துவிடமுடியும்.

**சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியான சிகிச்சை நிலையங்களின் பெயர்ப் பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

**01. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பழை**

01. ஆரம்ப சுகாதார நிலையம், தாவடி.
02. ம.ம., இணுவில்.
03. இணுவில் மத்திய கல்லூரி.
04. ம.ம., உடுவில்.
05. மல்வம் சேச்.
06. உடுவில் மேற்கு அந்திரான்.
07. இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்.
08. ம.ம., சுன்னாகம்.
09. யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
10. ம.ம.ம.ம., அளவெட்டி.
11. ஆ.சு.நிலையம், சங்குவேலி.
12. மல்லாகம் சிகிச்சை நிலையம் (தெல்லிப்பழை).
13. ம.ம., புன்னாலைக்கட்டுவன்.
14. ம.ம., ஏழாலை.
15. மயிலங்காடு சிகிச்சை நிலையம்.
16. ஏழாலை மாதர் சங்கம்.
17. ஏழாலை பிரதேச சபை.
18. வசாவிளான் சிகிச்சை நிலையம்.
19. ஆ.சு.நிலையம், குளமங்கால்.
20. ஆ.சு.நிலையம், ஈவினை.
21. பன்னாலை சிகிச்சை நிலையம்.
22. தாவடி காளி கோயிலடி.
23. இணுவில் கலாஜோதி வாசிகசாலை.
24. கல்லாரை.
25. பன்னாலை.

**02. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை**

01. சோளன்கள் சிகிச்சை நிலையம்,
02. மணியகாரன் தோட்டம் பாடசாலை.
03. ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.
04. வல்லிபுரக்குறிச்சி கிராம அலுவலர் காரியாலயம்.
05. திக்கம் சிகிச்சை நிலையம்.
06. அல்வாய் பிரதேச சபை பணிமனை.
07. அத்தாய் விநாயகர் பாடசாலை.
08. வியாபாரிமூலை சிகிச்சை நிலையம்.
09. சென்.அன்ரனி சிகிச்சை நிலையம்.
10. மாதனை மாதர் சங்கம்.
11. கற்கோவளம் சிகிச்சை நிலையம்.
12. தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம்.
13. பருத்தித்துறை மத்திய மருந்தகம்.
14. விக்கினேஸ்வரா சிகிச்சை நிலையம்.
15. வதிரி சிகிச்சை நிலையம்.
16. கப்பூது வாசிகசாலை.
17. கரவெட்டி மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை.
18. இராஜ கிராமம் சிகிச்சை நிலையம்.
19. கிரவித் தோட்டம் வாசிகசாலை.
20. கடைவேலி சனசமூக நிலையம்.
21. வோயிற்கடமை சனசமூக நிலையம்.
22. அம்பிகை பாலர் பாடசாலை.
23. உடுப்பிட்டி சனசமூக நிலையம்.
24. பாரதி சனசமூக நிலையம்.
25. இலகடி சனசமூக நிலையம்.
26. இமையாணன் மாதர் சங்கம்.
27. கலைமகள் பாலர் பாடசாலை.
28. உடுப்பிட்டி பிரதேச சபை.
29. மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை.
30. வளர்மதி பாலர் பாடசாலை, தொண்டமனாறு.
31. கொற்றாவத்தை அ.த.க., பாடசாலை.
32. பொலிகண்டி இ.த.க., பாடசாலை.
33. கொற்றாவத்தை அ.மி.த.க., பாடசாலை.
34. வல்வெட்டி இ.த.க., பாடசாலை.
35. அம்பன் அ.ம.த.க., பாடசாலை.
36. மணற்காடு பாலர் பாடசாலை.
37. குடத்தனை சிகிச்சை நிலையம்.
38. பொற்பதி வாசிகசாலை.

**03. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம்**

01. சிறுவர் பூங்கா பாலர் பாடசாலை.
02. ஈச்சமோட்டை பாலர் பாடசாலை.
03. திருநகர் சனசமூக நிலையம்.
04. குருநகர் சிகிச்சை நிலையம்.
05. ஆ.வே. மாயா பாலர் பாடசாலை.
06. யூப்ளி மகப்பேற்று நிலையம் - 1.
07. யூப்ளி மகப்பேற்று நிலையம் - 2.
08. ஆயுர்வேதக் கல்லூரி.
09. போதனா வைத்தியசாலை.
10. கொட்டடி பாலர் பாடசாலை.
11. நாவலர் சிகிச்சை நிலையம்.
12. நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை.
13. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கண்டி வீதி.
14. காந்தி சனசமூக நிலையம், அரியாலை.
15. ஞானக்குழந்தை பாலர்பாடசாலை, சிவப்பிரகாசம் வீதி.
16. வள்ளுவன் சனசமூக நிலையம், வண்ணார்பண்ணை.
17. அங்கர் பாமசி முன்.
18. கந்தர்மடம் சிகிச்சை நிலையம்.
19. செட்டித்தெரு சனசமூக நிலையம், நல்லூர்.
20. நல்லூர் சிகிச்சை நிலையம்.
21. மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்.
22. வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம்.

**04. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய்**

01. சுற்றயல் கூறு, சங்கானை.
02. ஆரம்ப சுகாதார நிலையம், பண்ணாகம்.
03. மத்திய மருந்தகம், தொல்புரம்.
04. ஐக்கிய சங்கப் பாடசாலை, சுழிபுரம்.
05. மத்திய மருந்தகம், வட்டுக்கோட்டை.
06. வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.
07. கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை.
08. அராலி தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலயம்.
09. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய்.
10. கிராமிய வைத்தியசாலை, பண்டத்தரிப்பு.
11. மத்திய மருந்தகம், இளவாலை.
12. சனசமூக நிலையம், மாசியப்பிட்டி.
13. மானிப்பாய் லயன்ஸ் கழகம்.
14. சனசமூக நிலையம், சுதுமலை.
15. ஆரம்ப சுகாதார நிலையம், சாவற்கட்டு.
16. ஆரம்ப சுகாதார நிலையம், முள்ளி, ஆனைக்கோட்டை.
17. வை.எம்.சி.ஏ.,நவாலி.

**05. சுகாதார வைத்திய அதிகாரி, சாவகச்சேரி**

01. மிருசுவில் வடக்கு பாடசாலை.
02. கச்சாய் பிரதேச சபை.
03. மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
04. கைதடி வடக்கு அம்பிகா மாதர் சங்கம்.
05. கைதடி தெற்கு கமநல நிலையம்.
06. வரணி ம.ம.ம.ம.

**06. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்**

01. இடைக்காடு சிகிச்சை நிலையம்.
02. சுற்றயல்கூறு அச்சுவேலி.
03. மத்திய மருந்தகம் புத்தூர்.
04. ஆரம்ப சுகாதார நிலையம், வாதரவத்தை.
05. சிறுப்பிட்டி சிகிச்சை நிலையம்.
06. அச்செழு சிகிச்சை நிலையம்.
07. நீர்வேலி சிகிச்சை நிலையம்.
08. ஊரெழு சிகிச்சை நிலையம்.
09. உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.
10. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்.
11. மாதா கோவிலடி, இருபாலை.
12. கட்டப்பிராய் சிகிச்சா நிலையம்.
13. கல்வியங்காடு சைவப் பாடசாலை.
14. திருநெல்வேலி கலாமன்றம்.
15. மத்திய மருந்தகம், கொக்குவில்.
16. கிராமிய அபிவிருத்திச் சங்கம், கொக்குவில்.
17. மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை, கோண்டாவில்.
18. சூசையப்பர் கோவிலடி.
19. கிராமசபை, புத்தூர்.
20. ஆரம்ப பாடசாலை சைவத்தமிழ், உரும்பிராய்.
21. செருக்கப்புலம் அன்னங்கை சிகிச்சை நிலையம், கோண்டாவில்

**07. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, ஊர்காவற்றுறை**

01. மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்றுறை.
02. தம்பசிட்டி சனசமூக நிலையம்.
03. மெலிஞ்சிமுனை சேச்.
04. ஆரம்ப சுகாதார நிலையம், புளியங்கூடல்.
05. ஆரம்ப சுகாதார நிலையம், நாரந்தனை.
06. சுற்றயல்கூறு காரைநகர்.
07. கரம்பொன் கிராம அலுவலர் காரியாலயம்.
08. வாரிவளவு ஆரம்பப் பாடசாலை.
09. சுற்றயல்கூறு அனலைதீவு.
10. ஆரம்ப சுகாதார நிலையம், எழுவைதீவு.
11. கிராமிய வைத்தியசாலை, வேலணை.
12. சாட்டி மாதா சேச்.
13. பராசக்தி வித்தியாலயம்.
14. மண்டைதீவு.
15. மாவட்ட வைத்தியசாலை, புங்குடுதீவு.
16. சுற்றயல்கூறு, நயினாதீவு.
17. மாவட்ட வைத்தியசாலை, நெடுந்தீவு.
18. நெடுந்தீவு மேற்கு - நிலையம்.
19. சுப்பிரமணியம் வித்தியாலயம்.

**மாகாண பிரதிப் பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்**

(C/18738)

# இந்த வார இராசி பலன்

# 21 - 10 - 2001 - 27 - 10 - 2001

| | | | |
|---|---|---|---|
| | | சனி | வி ரா |
| செ | இராசிச்சக்கரம் | | |
| கே | சந் | சூ ◄ | புத வெ |

மாற்றம்:-

**21 . 10 . 2001 இல் கேட்டை - சந்திரன் விருச்சிக இராசியில் நிற்கும்.**

அரசியலில் பழிவாங்குதல்கள், பதவிப் போட்டிகள் இருக்கும் தேர்தலில் பதற்ற நிலைகளை,பொய்யான செய்திகளை திட்டமிட்டுச் சிலர் பரப்பிய படி இருப்பார்கள். இந்தியாவுக்கு உதவிகள்—இராணுவ நிலைகளைப் பலப்படுத்த இரகசிய உதவிகள் கிடைக்கும்.

அமெரிக்கா தொடர்ந்து குண்டுத்தாக்கங்கள் செய்யும். ஈராக் தாக்கப்படும் — நிலை தோன்றும். மேற்கு நாடுகளில் திடீர்த் தாக்கங்களை முஸ்லிம் தீவிரவாதிகள் தொடர்ந்து செய்வார்கள். அத்திலாந்திச் சமுத்திர நாடுகள், மத்திய கிழக்கு நாடுகளில் பல தாக்கங்கள் ஏற்படும். இந்து சமுத்திர நாடுகளில் இயற்கையின் சீற்றம் தலை எடுக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

## மேடம்

அடிக்குமேல் அடி—அடித்தால் அம்மியும் நகரும். மலைக்கு மேல் குண்டுகள் போட்டால் மலைகளும் உடைந்து போகாதா? பெரியவர்களின் கோபத்திற்கு ஆளாகாமல் இருக்க முயலுவீர்கள். பல உதவிகள் அவர்களால் உங்களுக்குக் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். பூர்வீகத் தொடர்பானவர்களைச் சந்திப்பீர்கள். எதிர்ப்பாலாருடன் வாக்குக் கலகம் ஏற்படும். நெஞ்சு வருத்தம், கண் கூச்சம், வாய்வுத்தொல்லை

# மகாதேவா ஜோதிடம்

ஏற்படும். சட்டத்துறை,பாதுகாப்புத்துறை, எண்ணெய்த் துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.

## இடபம்

கௌரவத்திற்காக மயிர் சிலிர்த்தால் உயிர் துறக்கும் கவரிமான் போல மனித குலத்திலும் பலர் உள்ளனர். அதற்காக எந்த இழப்புக்களையும் தாங்குவர் சிலர். அதுபோன்று உங்கள் தொழில் ஸ்தானத்தில் சில சம்பவங்கள் நடக்க இடமுண்டு. இடமாற்றம், புதிய பொறுப்பு, பிறருக்கு உதவிகள் செய்தல், எதிரிகள் பயந்து ஓடுதல், இசைத்துறையில் நாட்டம் போன்றன நடக்கும். சலவருத்தம், ஈரலில் வருத்தம், தலைச்சுற்றல், பித்தமயக்கம் என்பன வரும். அதிக நீர் குடியுங்கள். ரீ. வீ, இசைத்துறையில் வருவாய், உணவுத்துறை, வியாபாரச் சிறப்பு, அஞ்சல் துறை போன்ற துறையினர்களுக்கு இலாபங்கள் ஏற்பட்டபடி இருக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.

## மிதுனம்

கட்சி மாறினால் அமைச்சரானாலும் பலதுன்பத்திற்கு ஆளாகாமல் இருக்க மாட்டார்கள். அதனால்தான் சிலர் கைகட்டி,வாய் பொத்தி மௌனமாக இருக்கின்றார்கள். எனவே நீங்களும் தொழில் ஸ்தானத்தில் சமயமறிந்து செயற்பட்டுத் தப்பமுயலுங்கள். அயலவர்களுடன் சமாதானமாக இருங்கள். பதற்றப்படுவீர்கள். பிறருக்கு உதவி செய்வீர்கள். தானதர்மச் சிறப்பு, சகோதரங்களுடன் வாக்குவாதம் ஏற்படும். எதிரிகள் பயப்படுவார்கள். தலைவலி, அடிகாயம், களைப்பு, வாய்வுத்தொல்லை என்பன ஏற்படும். அரசியல் துறை, நீதித்துறை, பல சரக்கு வியாபாரத்துறை, புடைவைத்துறை, நகை வேலைகள் போன்றதுறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.

## கடகம்

கட்சி மாறிய பல அரசியல்வாதிகள், அமைச்சர்கள் லஞ்ச ஊழலில் சிக்கிப் பல துன்பங்களுக்கு ஆளாக்கப்படுவார்கள். அயலவர்கள், நண்பர்கள் பல பழிச் சொற்களை அள்ளி விசுவார்கள். எதிர்ப்பாலாருடன் நிதானம். காசு வரும். சகோதர உதவிகளால் பூரிப்பு. மேலதிகாரிகளின் கண்டிப்பு மனப்பயத்தை ஏற்படுத்தும். தர்மத்துறை, எண்ணெய்த்துறை, அரசியல் துறை, செய்தித்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள். கை கால் பிடிப்பு, வயிற்று நோ, நாரிநோ என்பனவர இடமுண்டு

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள் வியாழன்.

## சிங்கம்

பொறுமை, கடமை, கண்ணியத்திற்கு சோதனை வேதனை வந்தால் எதையும் எதிர்கொள்வீர்கள். உங்கள் புகழ் பரவும். உண்மை உழைப்புக்கு நல்லவரவேற்பு நிச்சயம் இருக்கும். மேலதிகாரிகள் ஒத்துழைப்புத்தருவர். குடும்பத்தினரின் விஷயங்களில் ஈடுபாடு, மறைமுக எதிரிகளால் வேதனை. ஆயினும் அவர்கள் உங்களை எதுவும் செய்துவிட முடியாது. கண்கூச்சம், கோவப்படல், நாரிநோ, தொண்டைநோ, அதிக உழைப்பு என்பன வரும். வியாபாரத்துறை, நிர்வாகத்துறை, எண்ணெய்த் துறை, ஆசிரியத்துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.

## கன்னி

அளந்தறிந்து உங்கள்பாதையில் மெல்ல மெல்ல முன்னேறியபடி இருப்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் ஒரு மந்தநிலை இருக்கும். இன ஜன உதவிகள், நண்பர்களின் வருகைகள், பிரயாணச் சிறப்புக்கள், இடாம்பீகச் செலவுகள் எதிர்ப்பாலாரின் எதிர்ப்புக்கள் என்பன இருக்கும். அரச உதவிகள் இருக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்தால் நன்று. பொருள் களவு போகலாம். நிதானமாக இருக்கவும். சளி, லாதஉளைவு, நாரிப் பிடிப்பு, இரத்தவருத்தம் என்பன வரும். குருத்துறை, சட்டத்துறை, பாதுகாப்புத் துறை, கோயில் வேலைகள் என்பனவற்றால் ஆதாயங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.

## துலாம்

எந்த விசயத்தையும் பொறுமையுடன் ஆராய்ந்து தீர்ப்பு வழங்கும் நீதிதேவதையின் சின்னம் துலாம் இராசியாகும். எந்த அலுவல்களிலும் ஒரு சில பிரச்சினைகள் வரத்தான் செய்யும். அதைச் சமாளித்து செயற்பட்டபடி இருப்பீர்கள். புத்திசாதுரியமாகச் செயற்பட்டு வெற்றி அடைவீர்கள். உங்கள் கனிவான ஆலோசனைகளால் பலர் உதவிகள் பெறுவார்கள். தூரதேசச் செய்திகள். புத்திரருக்கு மாற்றம், புதிய பொறுப்பு, மேலதிகாரிகளின் உதவிகள் என்பன இருக்கும். பொருள்வரவு ஏற்படும். தலையிடி, தோல்வருத்தம், குடல் வருத்தம், சலவருத்தம் என்பன வரும். பாதுகாப்புப் பகுதி, குருத்துறை, விவசாயம். வியாபாரம் போன்ற துறையினர்கள் நல்ல ஆதாயங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்:- வியாழன்.

## விருச்சிகம்

பக்கத்தில் இருப்பவர்கள் உங்களுக்குத் தொல்லைகள் தந்தபடி இருப்பார்கள். படபடப்புத்தன்மை, புதிய பொறுப்பு, நல்லவர்களுக்கு உதவுதல், தர்மம் நீதிப்படி சில விஷயங்களை ஆராய்தல் என்பன இருக்கும். அயலவர்களை நம்பாதீர்கள். உங்கள் பொருள்களை எடுத்துச் சேதப்படுத்துவார்கள். உங்கள் தீர்ப்பை எவரும் மாற்ற மாட்டார்கள். நாரிநோ, நரம்புப்பிடிப்பு, சல வருத்தம் என்பன வரும். அதிக நீர் பருகுங்கள். பழவகைகள் பாவியுங்கள். விவசாயத் துறை, இரும்பு, மருந்து, போன்ற துறைகள்தொடர்பானவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்டநாள்:- வியாழன்.

## தனுசு

மதியாதார்முற்றம் மதித்து ஒருகால் சென்று மிதியாமை கோடி பெறும். உங்களுக்கு இந்த அனுபவம் ஏற்படும் காலமாகும். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் இருக்கும். தூரத்துச் செய்திவரும். உறவினருக்கு ஆலோசனை, பொருளால் வேதனை, கால் வருத்தம், தலைவிறைப்பு, வயிற்றில் வாய்வு, இரத்த வருத்த என்பன வரும். கொடுக்கல் வாங்கல், பிணை திற்றல் என்பனவற்றால் யோசனைவர இடமுண்டு. புதியபொறுப்பு, பொருள் வரவு என்பனவரலாம். பாதுகாப்புபகுதி, ஆசிரியத்துறை, மின்சாரத்துறை, எண்ணெய்த்துறை போன்ற துறையினர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன்.

## மகரம்

என்ன திட்டம்? எதுவும் எடுபடாது எனச் சோகம். பாவச் செயலால் பதை பதைப்பு. மறைந்து செய்வதை, மறைக்கும் உங்கள் கூட்டாளிகள் உங்களையே காட்டிக்கொடுப்பார்கள் எனப்பலன் உண்டு. கவனமாக இருக்கவும். மூட்டுவலி, தலைவலி, மனக்குழப்பம் என்பன ஏற்படும். கலகலப்பான காலமாகும். விட்டு விட்டு மந்தநிலை. இலாபம் என்றால் எதையும் செயற்படுத்த முனையும் நிலை என்பன ஏற்படும். எலும்புவருத்தம், நரம்புப்பிடிப்பு, மூட்டு வலி, வயிற்றில் வருத்தம் பித்தக் கொதிப்பு என்பனவரும். குடும்ப அலுவல்களில் ஈடுபாடு, பாதுகாப்புத்துறை, கோயில்வேலை, விவசாயத் துறை போன்றதுறையினர் நன்மை அடைவார்கள்.

அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள். வியாழன்.

## கும்பம்

நிறைகுடம் தளம்பாது. உடம்பில் வேதனை, நரம்புப் பிடிப்பு, நாரிநோவு எனச் சினந்து வந்தாலும் நாலு பேர் உங்களை நல்லபடி மதித்து நடப்பார்கள், அதிகம் யோசிக்காதீர்கள். இன்றைய புதியது நாளைக்குப் பழையது என்பதை மறவாதீர்கள். இடமாற்றங்கள், பிரயாணங்கள் ஏற்பட இடமுண்டு. தொண்டைநோவு, கால் வருத்தம், நீர்வடிதல் (மருந்து எடுக்கவும்) மூட்டு வருத்தம், பித்தக் கொதிப்பு ஏற்படும். ஊறுகாய், மோர் பாவிக்கவும். குருத்துறை, தரகுத்துறை. வியாபாரத் துறை, பாதுகாப்பு, சட்டத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மை வரும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன்.

## மீனம்

கொலை செய்தால் சட்டம் சும்மா விடுமா? காணி பூமியில் வாடகை இல்லாமல் ஒருவர் இருந்தால் மனம்பொறுக்குமா? கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் இருந்தால் பதற்றம் வராமல் இருக்குமா? இந்த அனுபவங்கள் தொழில் ஸ்தானத்தில் வர இடமுண்டு. பிரயாணங்களைத் தவிர்க்கவும். சளி, நரம்பு, இரத்தவருத்தம், கல்லீரலில் சிலருக்குப் பாதிப்பு, காய்ச்சல் என்பன எட்டிப் பார்க்கும். வைத்தியசாலை சென்று மருந்து எடுப்பீர்கள். இடாம்பீகச் செலவுகள் கட்டு மீறும். தூரத்துச் செய்திகள் வர இடமுண்டு. பிரயாணத் துறை, அரசியல்துறை, வியாபாரத்துறை, மருந்துத்துறை குருத்துறை போன்றவர்களுக்கு பல நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன்.

# குடிதண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்து

குருநகர் ஒக். 20

குடிதண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது தொடர்பான விளக்கக் கூட்டம் நேற்றுமுன்தினம் குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனப் பிரதிநிதிகள், குருநகர் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தினமும் காலையும் மாலையும் பைப் மூலம் பொதுமக்களுக்குக் கிடைக்கும் நீரைச் சிக்கனமாகப் பாவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இந்த நடைமுறையைக் கண்காணிப்பதற்காக பொதுமக்கள் கண்காணிப்புக் குழுக்களை அமைக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளதாக இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-51)

# முன்பள்ளி ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 20

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விசேட கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். நாச்சிமார் கோயிலடி கலைமகள் மாதிரி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-10)


31 ஆம் நாள்

நன்றி செலுத்தும் வழிபாடு



தோற்றம் 04 — 03 — 1916

மறைவு 20 — 09 — 2001

திருமதி தவமணி அருட்பிரகாசம்

அவர்களின் வாழ்க்கைக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் வழிபாடு இன்று (20—10—2001) சனிக் கிழமை காலை 11. 30 மணிக்கு (S.L.T.) 25, 'ஆக்' ஒழுங்கை, உடுவிலில் அன்னார் வசித்த இல்லத்தில் நடைபெறும்.

இவ்வழிபாட்டிலும், மதிய ஐக்கியத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. A. றேஜ் ரஞ்சன் (மகன்),
திரு. S. மதிவாணன் (பேரன்).

25. 'ஆக்' ஒழுங்கை,
உடுவில், சுன்னாகம்.

(93595)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

டாக்டரின் பாவனையில் உள்ள, 10,000km ஓடிய QINGQL - SUZUKI, QS 90 -A மோட்டார் சைக்கிள் உடன விற்பனைக்குண்டு. தொடர்பு:- இல.55, பலாலி வீதி, கந்தர்மடம். (93597)

இரண்டு அலுவலக மேசைகள், இரண்டு வேலைப்பட்டடை மேசைகள் (2'X6'அளவு), இரண்டு றாக்கைகள் (8'நீளமும் 11/2அடி அகலமும் 6' உயரமும்) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்-2037. (93594)

இங்கிலாந்து டைனமோ 13 1/2kv, 1500 R.Pm சிங்கிள் பேஸ், லிஸ்ரர் இஞ்சின் 33H.P D.C டைனமோ வெல்டிங் யன்பார் என்ஜின் 16HP, 88 Sri தொடர் இலக்கம் CD200 மோட்டார் சைக்கிள் எலக்ரோனிக் மொடல என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- T.R.துரை பருத்தித்துறை வீதி, கொடிகாமம். T.P.070-212927. (93565)

தட்டு ஓடுகள், முகட்டு ஓடுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- பொ.சற்குணம், பிரதான வீதி, வடலியடைப்பு. (93598)

திருக்குறள், ஞானக்கோவை, தாயுமானவர், வள்ளலார் பாடல்கள், நல்வழி, நற்சிந்தனை, சைவசமய விரதங்கள் இன்னும் சிவஞானம் பயன்தரு நூல்கள் பல இருக்கின்றன. இல. 135,சிவன் கோயில் முன்பாக, நல்லூர், யாழ்ப்பாணம். (நேரம்: மாலை 2.00 - 7.00 வரை) (93650)

## பணிப்பெண் தேவை

டாக்டரின் வீட்டில் வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்கு ஓரளவு கல்வியறிவுள்ள, குடும்பப்பாங்கான, பண்புள்ள பெண் தேவை. தொடர்பு: Dr.S.V. தங்கராசா, கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம். (C/18701)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1966, ரேவதி நட்சத்திர, பெண் ஆசிரியைக்கும், 1969, விசாக நட்சத்திர, ஆண்பட்டதாரி வங்கி உத்தியோகஸ்தருக்கும் மணமக்கள் தேவை. ஜாதகம், புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு:- விள.இல.1381, மே/பா உதயன். (93592)

## MATHS O/L

பழைய புதிய பாடத்திட்டத்தில் Credit, Distinction ஒரு மாதத்தில். இதுவரையும் பெறுபேறடையாதவரும் Paper Class வரை கற்பிக்கப்படுவர். ஆசிரியர், 85,சிவன்கோயிலடி, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (93593)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் (பாதிக்கோழி உட்பட) சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். கிடைக்கும் இடம்: 227, பிறவுண் வீதி, (கலட்டிச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (93617)

## தவறிவிட்டது

யா/வீரசிங்க மகாவித்தியாலய மாணவன் இராசரத்தினம் ராகுலன் என்பவருடைய வி.அ.அ. பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பாடசாலையிலோ அல்லது கொடிகாமம் தபால் நிலையத்திலோ ஒப்படைத்து உதவவும். (93590)

குமரநகர், கைதடி மத்தி, கைதடியைச் சேர்ந்த தம்பிஐயா சிவகுருநாதன் என்பவருடைய விசேட அ.அ. (இல.091013251) சுன்னாகத்துக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாயி மெடிக் கிளினிக், கே.கே.எஸ்.றோட், சுன்னாகத்தில் ஒப்படைத்துதவவும். (93585)

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைச் சேர்ந்த வீரவாகு ஈழரதி என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.091033959) ஆவரங்காலுக்கும் வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கும் இடையில் மினி பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் R.D.S.லேன், ஆவரங்கால், புத்தூர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (93609)

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சரவணமுத்து தேவநந்தினி என்பவருடைய தே.அ.அ. (இல.785963849V), வி.அ.அ. (இல. 0905011878) என்பன தாவடிக்கும் உடுவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேறபடி விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (93614)

சித்தன்கேணியைச் சேர்ந்த க.உமாபாலனின் முக்கிய ஆவணங்களடங்கிய கடிதமொன்று 13.10.2001 சனிக்கிழமை காரைநகர் செல்லும் பிரதான வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கணேச வித்தியாசாலைக்கு அருகில் உள்ள அவரது இல்லத்தில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (93618)

## O/L கணிதம் 2001

விசேட சித்தியடைவதற்காக ஆரம்ப அறிவிலிருந்து சகல அலகுகளும் கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினாவிடை வகுப்புகளும், நேரத்துகுப் பரீட்சை எழுதும் பயிற்சியும் 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும். தொடர்பு:- க.ஆறுமுகநாதன், 10, கசசேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (93538)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

சமிரா சேலான் குஞ்சுகள் விற்பனைக்கு. விலை 43/= (27.10.2001) இல்: பகிரா நம்பர் I 43/= நம்பர் II 30/=, (ஓடருக்கு மட்டும்) மருந்துகளும் பெற்றுக்கொள்ளலாம். வை.சிவகுமார், இல.461, நாவலர் வீதி, அத்தியடி; றஞ்சிதன், மாலி சந்தி, அல்வாய். 1 மாதம் பிறிமா சிவப்பும் விற்பனைக்கு உண்டு. (93583)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர், இறைச்சிக் கோழி சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்பனைக்குண்டு. கிடைக்கும் இடம் ம.யோ.இதயராஜ் (சங்கானை மல்லாகம் வீதியில் சூசையப்பர் தேவாலயம் முன்பாக) அலுக்கை, அளவெட்டி. (93601)

## விற்பனைக்கு

INTEL PENTIUM COMPUTER (WITH MULTIMEDIA) உடன் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் தொடர்புகொள்ளவும். 120, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (93626)

## இறைச்சிக்கோழி தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. தொடர்பு: க.தனபாலசிங்கம், இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (93613)

## DISSERTATION TYPE SETTING

கணனி மூலம் DISSERTATION TYPE SETTING வேலைகள் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: ஸ்ரீ.கலாதரன், 300/1, கோயில் வீதி, நல்லூர். (93623)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியில் இருந்து கூவில் தீபஜோதி முன்பள்ளிக் கட்டடம் அமைப்பதற்காக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை ஒதுக்கி உதவியமைக்காக,



மாண்புமிகு அமைச்சர்
K.N.டக்ளஸ் தேவானந்தா
அவர்களையும்



ஈ.பி.டி.பியின்
பிரதான அமைப்பாளரும் முன்னாள்
நாடாளுமன்ற உறுப்பினருமான
உயர்திரு. கே.வி.குகேந்திரன்
(ஜெகன்) அவர்களையும்



வடமராட்சி ஈ.பி.டி.பி.
அமைப்பாளரும், பருத்தித்துறை
பிரதேச சபைத் தலைவருமான
எமது நம்பிக்கைக்குரிய
உயர்திரு.ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்
அவர்களையும்

*நன்றியுடன் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

-தீபஜோதி சனசமூக நிலையம்.

*கூவில், புலோலி.* (C-18777)

## மரண அறிவித்தல்

### பிச்சைமுத்து சந்தனம் ஆச்சாரி

இரத்தினபுரி, இல.25/2, பள்ளிவாசல் வீதியை வசிப்பிடமாகக்கொண்ட பிச்சைமுத்து சந்தனம் ஆச்சாரி 18.10.2001 வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் பிச்சைமுத்து - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாவலப்பிட்டி சுப்பையா ஆச்சாரி - லெட்சுமியின் அன்பு மருமகனும், சாலாச்சியின் அன்புக் கணவரும், செல்வகுமார், தமிழ்ச்செல்வி, மலர்விழி, செல்வராணி, பன்னீர்ச்செல்வம், உதயகுமார் (துரை), உதயமலர், சுபாசினி, இதயரஞ்சினி, சசிக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், புஸ்பநாதன், பாஸ்கரன், இராஜரட்ணம் (ராஜன்), விமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அண்ணாமலை மற்றும் இரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், தேனுஷா, மயூரதாஷன், தினுக்குமார், கவிராஜ், சஹானா, கபிலாஜினி, மோனலீஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2001) சனிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு அவரது வீட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இரத்தினபுரி காவல்லை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*81/1, சீனியர் ஒழுங்கை,*
*கலட்டி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
ச.செல்வகுமார் (மகன்),
ச.பன்னீர்ச்செல்வம் (மகன்). (93608)

## அபிவிருத்தித் தொண்டர் ஒன்றுகூடல்

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த அபிவிருத்தித் தொண்டர்களின் ஒன்றுகூடல் இன்று காலை 9 மணிக்கு தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கா.வே. குகேந்திரன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ப.வேலாயுதபிள்ளை, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் ஆகியோர் கலந்து கொள்வர். (ம-117)

## TENDER NOTICE

**MINISTRY OF URBAN DEVELOPMENT PUBLIC UTILITIES**
**HOUSING & SPORTS**
**DEPARTMENT OF BUILDINGS.**

1. The Chairperson, Ministry Tender Board, Ministry of Urban Development, Public Utilities, Housing & Sports will receive sealed tenders for the Construction of Three storeyed Hostel at University of Jaffna upto 10.00 a.m on 15.11.2001.
2. Tender forms are available for purchase at the Chief Engineer's Offices whose addresses are given in Para 8 below up to 3.30p.m on 12.11.2001 on payment of non refundable tender fee of Rupees: One Thousand (Rs.1,000.00) only. Belated callers will be charged additionally a late fee of Rupees: Three Hundred (Rs.300.00) only for each day of delay, prior to issue of tender documents.
3. Tenders will be opened immediately after the closing at the Conference Hall B in the Second Floor, "Sethsiripaya", Battaramulla, Tenderers or their authorised representatives may be present at the opening of tenders.
4. Tender forms will be issued only to Contractors registered as Building Construction Contractors under the scheme of National Registration and Grading of Construction Contractors developed by Institute for Construction Training and Development (ICTAD) for Grade M 5 and above having membership of the National Construction Contractors Association of Sri Lanka (NCCASL).
5. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to the Chairperson, Ministry Tender Board, Ministry of Urban Development, Public Utilities, Housing & Sports, "Sethsiripaya", Sri Jayawardenapura, Kotte, Battaramulla to receive before closing time.
6. Tenderers are advised that no late bids will be accepted and they should enter "Sethsiripaya" Premises at least 01 hour before the scheduled time for tender closing, due to security checking.
7. Tender documents may be inspected free of charge and any further details could be obtained from the Chief Engineers whose addresses are given in para 8 below,
8. Addresses of Chief Engineers, Offices where the tender documents could be purchased:-

1. **Chief Engineer (Jaffna),**
   **Department of Buildings,**
   **No. 46, Somasundaram Lane, Jaffna.**
2. **Chief Engineer (Colombo Construction),**
   **Department of Buildings,**
   **Model Farm Road, Colombo - 08.**

**A.D.Wickramasinghe,**
**Director of Buildings,**
**Department of Buildings,**
**" Sethsiripaya", Sri Jayawardenapura,**
**Kotte, Battaramulla.** (C/18778)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*யா/சுதுமலை அரசினர் த.க.பாடசாலை மாணவன்*
செல்வன்
விஜயராசா விஜிதரன்

2001 – 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 125 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டுப் பாராட்டுவதுடன், அவரை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி:-
*அரசடி வீதி,*
*சுதுமலை கிழக்கு,*
*மானிப்பாய்.*

நிரந்தர முகவரி:-
*மாம்பிராய் றோட்,*
*காங்கேசன்துறை.* (93620)

- அப்பா, அம்மா, அம்மம்மா.

## 25ஆவது வருட திருமண வாழ்த்து



**அந்தோனிப்பிள்ளை ஹெலன்ஜெசி (றாஜினி)**
**தம்பதியினரின்**
25ஆவது வருட நிறைவில் இன்று வெள்ளிவிழாக் காணும் எமது முகாமையாளரையும் அவர்தம் துணைவியாரையும் மனமார வாழ்த்துகின்றோம்

*வடபிராந்திய காரியாலயம்,*
*இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.*

- அனைத்து ஊழியர்களும். (93624)

# கட்டாயக்கல்வி பிரசார தினம்

✳ கண்காட்சி ✳ பரிசளிப்பு விழா

'யுனிசெவ்' அனுசரணையுடன் பிராந்தியம் 9 மற்றும் 10 சார்ந்த லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்திய ஓவியப் போட்டியின்

## கண்காட்சியும் பரிசளிப்பு விழாவும்

*இடம்* :- இந்துக் கல்லூரி - கொக்குவில்.
*நாள்* :- நாளை (21.10.2001) ஞாயிற்றுக்கிழமை
*நேரம்* :- காலை 9.30 மணி

பிரதம விருந்தினர்

செல்வி எலோனொறா டாஸ்கோ
Ms.ELEONORA TASCO

திட்ட அதிகாரி - 'யுனிசெவ்', யாழ்.அலுவலகம்

கழக/பிராந்திய மட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட ஓவியங்கள் கண்காட்சியில் இடம்பெறுவதுடன், பரிசில்களும் வழங்கப்படும். கழக/பிராந்திய மட்டங்களில் தெரிவுசெய்யப்பட்டோர் குறிப்பிடப்பட்ட லயன்ஸ் கழகங்கள் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அனைவரையும்அன்புடன் அழைக்கின்றோம்.

லயன்ஸ் கழகங்கள்,
பிராந்தியம் 10, 9 - மாவட்டம் 306B.

(93631)

## தெரிவுப் பரீட்சை

2001/2002 கல்வியாண்டுக்கான பட்டப்பின் கல்வி டிப்ளோமா உள்வாரித் தேர்வுப் பயிற்சிநெறிக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று காலை 10.30மணிக்கு நடைபெறவுள்ளது.

(ம-10)

## ராஜா யாழ்ப்பாணம்

விஜய், சிம்ரன் நடித்த

### ப்ரியமானவளே

தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2, 5 (புதிய நேரம்)
23.10.2001 முதல்

உரிமைக்குரல்

(C/18719)

## நாகம்ஸ் சுன்னாகம்

### THE PLOT

(ரீல்ஸ்)

(இதுவரை கண்டிராத ஆண்கள், பெண்களுக்கிடையிலான விறுவிறுப்பான கராட்டிச் சித்திரம்)

காட்சிகள்: – 11.00, 2.30, 5.00 (பு.நே.)

(93622)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

## கேள்வி அறிவித்தல் - 2002

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகள், சந்தைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் என்பவற்றை 2002ஆம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதி தொடக்கம் 2002ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதிவரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 02.11.2001 முற்பகல் 10.30மணிவரை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நெல்லியடியிலுள்ள தலைமை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு முற்பகல் 10.45 மணிக்கு திறந்து பரிசீலனை செய்யப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப்படிவத்தின் இணைப்பிரதி பிரா/உ.உ.ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை கேள்விப்பத்திரப்பணம், கேள்விப்பத்திரப்பணத்தின் 12.5% ஜீ.எஸ்.ரீ., கேள்விவைப்புப் பணம் ஆகியவற்றைச் செலுத்துவதன்பேரில், அவ்வவ் உப அலுவலகப் பொறுப்பதிகாரிகளிடமிருந்து 01.11.2001ஆம் திகதி நண்பகல் 12.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும். கேள்விகள் தொடர்பான மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் உப அலுவலகங்களில் அல்லது தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவாக கேள்விகள் சமர்ப்பிப்பவர்களின் கேள்விவைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படும்.

| சந்தைகள், இறைச்சிக்கடைகள் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (ஜீ.எஸ்.ரி.நீங்கலாக) |
|---|---|---|---|
| **நெல்லியடி உப அலுவலகம்** | | | |
| 01. மீன் சந்தை - நெல்லியடி | 150 | 1,000 | 1,78,000/- |
| 02. மரக்கறிச்சந்தை - நெல்லியடி | 1,000 | 20,000 | 13,53,000/- |
| 03. கோயிற்சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட) | 250 | 3,500 | 2,10,000/- |
| 04. கொட்டடிச்சந்தை | 100 | 500 | 4,000/- |
| 05. துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் - நெல்லியடி | 150 | 1,000 | 80,000/- |
| 06. நெல்லியடி - ஆட்டிறைச்சிக்கடை இல.01 | 100 | 500 | 20,000/- |
| 07. நெல்லியடி - ஆட்டிறைச்சிக்கடை இல.02 | 100 | 500 | 22,000/- |
| 08. நெல்லியடி - ஆட்டிறைச்சிக்கடை இல.03 | 100 | 500 | 18,000/- |
| 09. மாட்டிறைச்சிக்கடை இல.02 | 150 | 3,000 | 2,43,000/- |
| 10. மாட்டிறைச்சிக்கடை இல.03 | 150 | 3,000 | 2,43,000/- |
| 11. கோயிற்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 150 | 500 | 18,000/- |
| 12. கொட்டடிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100 | 500 | 6,000/- |
| 13. கோயிற்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 100 | 1,000 | 1,32,000/- |
| **உடுப்பிட்டி உப அலுவலகம்** | | | |
| 14. உடுப்பிட்டிச் சந்தை | 500 | 5,000 | 4,69,000/- |
| 15. அந்திரான் சந்தை | 150 | 500 | 21,000/- |
| 16. நவிண்டில் சந்தை | 100 | 500 | 7,000/- |
| 17. உடுப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 150 | 2,000 | 3,42,000/- |
| 18. உடுப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100 | 500 | 8,000/- |
| 19. அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 100 | 500 | 33,000/- |
| 20. உடுப்பிட்டி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 100 | 500 | 54,000/- |
| **கட்டைவேலி உப அலுவலகம்** | | | |
| 21. துன்னாலை வடக்கு சந்தை | 100 | 500 | 700/- |
| 22. துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100 | 500 | 23,000/- |
| 23. அல்வாய் தெற்கு சந்தை மாட்டிறைச்சிக்கடை | 100 | 500 | 16,000/- |

த.ஜெயராசா ஜே.பி.
தலைவர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

*வட.தெ.மே.பிரதேச சபை,*
*கரவெட்டி.*
*17.10.2001.*

(C/18781)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## 20.10.2001

HAPPY BIRTHDAY



சண்முகலிங்கம் - மகேஸ்வரி [சறோ] தம்பதியினரின் தவப்புதல்வன்

செல்வன்

## சாருஜன்

சாருஜன் 1st

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (20.10.2001) ஞாயிற்றுக்கிழமை புலோலியில் இருக்கும் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

சாருஜனை நோர்வேயில் இருக்கும் அன்பு அப்பா, புலோலியில் வசிக்கும் அம்மா மற்றும் கனடாவில் வசிக்கும் அத்தைமார், மச்சாள்மார், மச்சான்மார், ஜேர்மனியில் வசிக்கும் மாமா, குட்டி அத்தை, லண்டனில் வசிக்கும் சித்தப்பா, மச்சான் மற்றும் கோப்பாயில் வசிக்கும் அப்பம்மா, சித்தி, அக்காமார், சுன்னாகத்தில் வசிக்கும் மாமா, அத்தை, மச்சான்மார், மச்சாள்மார் ஆகியோர் பல்லாண்டு காலம் வல்லிபுர ஆழ்வாரின் அருள்பெற்று பல்கலையும் கற்று வாழ இனிதே வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
S.இரத்தினம்.

*ஆறுமுகம் வீதி, கந்தரோடை.* (93640)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



அளவையூர் அருட்கவி

## சீ.விநாசித்தம்பிப் புலவர்

அவர்களுக்கு

யாழ்.பல்கலைக்கழகம் 'முதுகலைமாணி'ப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமையையிட்டு பெருமகிழ்வு கொள்வதுடன் அவரின் தமிழ்ப்பணி மேலும் தொடர இறைவனைப் பிரார்த்தித்து, வாழ்த்துகின்றோம்.

சி.சிவமூர்த்தி குடும்பம்,
ப.பரமேஸ்வரன் குடும்பம்,
சி.சதீஸ்வரன் குடும்பம்.

*அர்ச்சனா ஜுவல்லர்ஸ்,*
*118, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/18780)

# வாழ்த்துகின்றோம்

25 வருட காலம் மக்கள் வங்கியில் வாடிக்கையாளர்களுக்கு அதி உன்னத சேவையாற்றியமைக்காக இன்று (20.10.2001) சனிக்கிழமை எமது உதவிப் பொதுமுகாமையாளர்

*திரு. சி. இளம்பிறைநாதன்* அவர்களால்

கௌரவிக்கப்படும்
எமது கிளையைச் சேர்ந்த

முகாமையாளர்:- திரு.க.பாலச்சந்திரன்

நண்பர்:- திரு.சி.யோகராஜா

நண்பர்:- திரு.S.C.செல்வராஜா

மற்றும் எமது ஏனைய கிளை நண்பர்களையும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

ஊழியர்கள்,
மக்கள் வங்கி,
பிரதான வீதி - 104,
யாழ்ப்பாணம்.

(93644)

# சுன்னாகம் வர்த்தக சங்கத்தால் நடத்தப்படும்

## கலை நிகழ்ச்சிகள்

இன்று (20.10.2001) சனிக்கிழமை மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

7.00 மணிக்கு அகில இலங்கை ஜனாதிபதி விருதுபெற்ற பருத்தித்துறை K.S. பாஸ்கரன் குழுவினரின் இசை நடன விருந்து (பிறேக் டான்ஸ்)

10.00 மணிக்கு அரியாலை சாரங்கா இசைக்குழுவினரின இன்னிசை கானங்கள்

**பிரவேசம்: இலவசம்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு:* அன்றிரவு இப்பகுதியில் மாத்திரம் ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டிருக்கும்.

*நிர்வாகம்,*
*சுன்னாகம் வர்த்தக சங்கம்.*

(93633)

# யாழ். - வவுனியா அணிகள் இன்று கிரிக்கெட் மோதல்
## மத்திய கல்லூரி மைதானத்தில்

யாழ்ப்பாணம்,ஒக்.20

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்களுக்கு இடையிலான முக்கோண கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று யாழ்நகரில் ஆரம்பமாகின்றது.

யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 10மணி முதல் நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி, வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து மோதுகின்றது.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் மாவட்ட ரீதியிலான தேசிய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆரம்பநிலை ஆட்டங்களே இன்று தொடங்குகின்றன.

ஐம்பது ஓவர்களைக் கொண்டதாக இந்த ஆட்டம் அமையும்.

தொடர்ந்து ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் ஆரம்பநிலை ஆட்டங்கள் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு அணிகளுக்கு இடையில் மாறிமாறி நடைபெறும்.

முக்கோணப் போட்டியின் இறுதியாட்டம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் வீரர்களின் விவரம் வருமாறு:-

**யாழ். அணி**

ஏ.எஸ்.நிஷாந்தன் (அணித் தலைவர்), என்.சுதேஷ்குமார் (உதவித் தலைவர்), என்சிவராஜா, ரீ.கௌரிபாலன், கே.சசிகரன், ஆர்.ஷாஜகான், எஸ்.விமலன், எஸ்.லக்ஷ்மிகாந், எஸ்.காண்டீபன், பி.ஜெயரூபன், பி.லவேந்திரா, ஜே.ஜெயதீபன், எஸ். கிருஷ்ணராஜா, பி.பிருந்தாவன், கே.செல்வராஜா, ஏ.நினஸ்.

முகாமையாளர்:- என்.செல்வநாயகம், பயிற்றுநர்:- வி.கே.சண்முகலிங்கம்.

**வவுனியா**

ஆர்.றொபின்ஸன் றோய் (அணித் தலைவர்), எஸ்.கௌசிகன், ஐ.பி.என. சிசிர குமார, என்.பி.விஜேசிங்க, பி. பிறேமஜீவ, ஆர்.ஜெயசூரிய, ஐ.ரமணன், வி.மிதுலன், கே.எஸ்.முகுந்தன், ரி.யதார்த்தனன், ஸி.மோகனகுமார், ஸி.விநோத்குமார், எஸ்.திருச்செல்வம்.

முகாமையாளர்:-கே.தவராஜா, பயிற்றுநர்:-ரி.கமலன். (உ)

---

### கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் அந்தத் தபாலை கறுவாக்காடு பொலீஸாரிடம் ஒப்படைத்ததாகவும்-

அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் இதை இரசாயன ஆய்வுக்காக அமெரிக்காவுக்கு அனுப்பியுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை - இலங்கையில் 'அந்திரெக்ஸ்' பக்ரீறியா ஆபத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க விசேட செயலணி ஒன்றை சுகாதார அமைச்சு அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுகாதார, சுதேச மருத்துவ சமூக சேவைகள் அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா நியமித்துள்ள இச்செயலணிக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஏ.எம்.எல். பெலிகஸ்வத்தை தலைவராக செயற்படுவார். (உ-க-7-3)

---

### கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட இவர்கள் பிற்பகலில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருந்தனர்.

ரொறண்டோ பொலீஸ் தலைவர் ஜூலியன் பன்ரினோ நேற்றுப் பிற்பகல், இந்தக் கைதுகள் குறித்து செய்தியாளர் மாநாடு ஒன்றில் விளக்கமளித்திருந்தார்.

இந்த விடிகாலைத் தேடுதலின் போது, கைது செய்யப்பட்டவர்களின் வீடுகளில் இருந்து கைத்துப்பாக்கிகள் மீட்கப்பட்டதாகவும் -

அவர்களில் பலருக்கு எதிராகப் போதைவஸ்து, ஆயுதங்கள், கொள்ளை, மோசடி மற்றும் குடிவரவுச் சட்ட மீறல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

பஞ்சலிங்கம் நாகலிங்கம், சுரேஷ் கனகலிங்கம், கைலாஷ் தணபாலசிங்கம், ஜெயசீலன் துரைசிங்கம் ஆகியோர் கைது செய்யப்பட்ட நாற்பது பேரில் அடங்குவர். (உ-க)

---

### போலியோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருப்போர் தமக்கு அருகில் இருக்கும் எந்தவொரு நிலையத்திலும் தமது குழந்தைகளுக்குச் சொட்டு மருந்தைப் பெற்றுக்கொள்ளவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, போலியோ தடுப்பு மருந்து வழங்கப்படுவதை முன்னிட்டு விடுதலைப்புலிகள் தரப்பும் இலங்கை அரசாங்கமும் நேற்றும் இன்றும் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளன.

கடந்த மாதம் 22ஆம் திகதியும் முதலாம் கட்டமாக போலியோ சொட்டுமருந்து வழங்கப்பட்டது. அவ்வேளையும் இரண்டு தினங்கள் இது போன்றே அரசும் புலிகளும் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-10-17)

---

# இலங்கை வானொலியில் கரிகாலன் குறித்துச் செய்தி

கொழும்பு,ஒக்.20

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் துணைப் பொறுப்பாளர் கரிகாலன் நேற்றுக்காலை கிளைமோர் தாக்குதல் ஒன்றில் உயிரிழந்ததாக இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது.

ஆனால், அந்தத் தகவலை புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் முழுப்பொய் என வர்ணித்தன.

இந்த விடயம் குறித்து இலங்கை வானொலி தெரிவித்ததாவது:-

இந்தக் கிளைமோர்த் தாக்குதல சம்பவம் நேற்று (வெள்ளி) அதிகாலை மட்டக்களப்பு அம்பலாந்துறையில் இடம்பெற்றுள்ளது. கரிகாலனுடன் சென்ற இரண்டு பேரும் கொல்லப்பட்டுள்ளனர். கரிகாலன் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண செயற்பாட்டுத் தலைவராவார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. ஆதலினால் இது உட்பூசலாக இருக்கலாம் எனப் பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

ஒட்டுசுட்டானில் இது போன்ற தாக்குதல் ஒன்றில் சில வாரங்களுக்கு முன்னர் முன்னணித் தலைவர் சங்கர் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்துக்குப் பின்னர், விடுதலைப் புலிகள் தமது செய்தித் தொடர்பைக் குழப்பி இந்தத் தகவல் படையினருக்குத் தெரியவராமல் இருப்பதற்கு முயற்சி செய்தனர்.

சங்கர் கரிகாலனின் நெருங்கிய சகா என்பதும் குறிப்பிடத்தக்கது - என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் -

படுவான்கரை - கறுக்கா முனைப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற கிளைமோர்த் தாக்குதலில் கந்தப்போடி கந்தசாமி என்பவர் காயமடைந்தார் - என்று புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு அறிவித்தது. (உ-164-7)

# ஜி.எல்.பீரிஸின் பாதுகாப்பை இரட்டிப்பாக்க உத்தரவு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ள முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு பாதுகாப்பு வழங்கும் விசேட அதிரடிப்படைக் கொமாண்டோக்களின் எண்ணிக்கையை 6 இலிருந்து 12 ஆக அதிகரிக்குமாறு தேசிய மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பாயில் முஸ்தபா சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணிததுள்ளார்.

தமது பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டது குறித்து ஜி.எல்.பீரிஸ் செய்த முறைப்பாடு தொடர்பான பூர்வாங்க விசாரணையை மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று கொழும்பில் நடத்தியது.

இந்த விசாரணையின்போது முன்னாள் அமைச்சர் பீரிஸ் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பன பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிடம் இருந்தும் பீரிஸின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

இந்த விசாரணைகளில் பிதிப் பொலீஸ் அதிபர் ஏ.ஆனந்தராஜாவும் கலந்துகொண்டார்.

ஜி.எல்.பீரிஸுக்கு முன்னர் விசேட அதிரடிப்படைக் கொமாண்டோக்கள் 78 பேர் பாதுகாப்பு வழங்கினர். எனினும் அவர் அரசில் இருந்து விலகியதும் அந்த எண்ணிக்கை திடீரென 4 ஆகக் குறைக்கப்பட்டது. பீரிஸின் கோரிக்கையை அடுத்து அந்த எண்ணிக்கை 6 ஆகியிருந்தது குறிப்பிடத்தக்கது. (க-7)

---

### வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தவேண்டும் எனக் கோரும் மகஜர் ஒன்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதருக்கு முகவரியிடப்பட்டு, ஆர்ப்பாட்டக்காரர்களால் வவுனியா அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து ஹொரவப்பொத்தானை வீதியூடாக மீண்டும் வவுனியா பள்ளிவாசலை வந்தடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் ஆகியோரின் கொடும்பாவிகளை எரித்தனர். (க-7)

---

### பாண்டிச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யேற்றுக்கொண்ட ஐ.சண்முகம் அடுத்தமாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் ஏதேனும் ஒரு சட்டமன்ற உறுப்பினராகித் தமது பதவியை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். எனினும் காங்கிரஸின் சட்டமன்ற உறுப்பினர் எவரும் தமது பதவியை இழந்து சண்முகத்துக்கு இடம் கொடுக்க முன்வராததை அடுத்தே அவர் தமது பதவியை இராஜினாமாச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### வாணி விழா

யாழ்.வலயக் கல்வி அலுவலக ஊழியர் நலன்புரிக் கழகத்தின் வாணி விழா எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கழகத் தலைவர் இ.நாகராஜா தலைமையில் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசிரியர் இரா. செல்வவடிவேலின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (ம-10)

---

### திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன் (செல்வகணபதிப்பிள்ளை ரமேஷ் - கொழும்பு)

● 2ஆம் லெப்டினன்ட் வேந்தன் (செல்லத்துரை பாலகுமார் - யாழ்ப்பாணம்).

இதேவேளை -

மணலாறுப் பகுதியில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் சிவா (இராசு பாலகுமார் - யாழ்ப்பாணம்) என்பவரும் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (க-7)

---

### வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூறினார்.

இடம்பெயர்ந்தோர் வாக்களிப்பதற்கு வசதியாக இப்பிரதேசத்தில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் கடமைகளில் முற்றாக இராணுவத்தினரை ஈடுபடுத்துவது ஜனநாயக முறையல்ல என்று தமிழ்க் கட்சிகள் கண்டித்துள்ளன.(உ-க-7-3)


# அறிவித்தல்

## வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு
## பனை அபிவிருத்திச் சபை
## சீவல் தொழிலாளர்களுக்கான ஆயுள் காப்புறுதித் திட்டம்

யாழ்.குடாநாட்டில் சீவல் தொழிலில் ஈடுபடும் ஊழியர்கள் எதிர்நோக்கக்கூடிய விபத்துக்களையும் உயிர் இழப்புக்களையும் ஈடுசெய்யும் வகையில் வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் ஆயுள் காப்புறுதித் திட்டம் ஒன்றை பனை அபிவிருத்திச் சபையினால் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் பொருட்டு இத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பின்வரும் விவரங்களைத் தாம் அங்கத்துவம் வகிக்கும் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 26.10.2001ஆம் திகதிக்கு முன்னர் பனை அபிவிருத்திச் சபை பொது முகாமையாளரிடம் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

1. முழுப்பெயர்:-
2. விலாசம்:-
3. பிறந்த திகதி:-
4. அடையாள அட்டை இலக்கம்:-
5. அங்கத்துவம் வகிக்கும் சங்கத்தின் பெயர்:-
6. அங்கத்துவ இலக்கம்:-

**ந.ா.சந்திரமோகன்**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்,**
**பனை அபிவிருத்திச் சபை.**

*குறிப்பு:- இது தொடர்பாக மேலதிக விவரங்களை அறிந்துகொள்ள விரும்பும் தொழிலாளர்களோ அவர்கள் சார்ந்த சங்கங்களோ கண்டி வீதியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபை தலைமையகத்துடன் நேரில் தொடர்புகொள்ளவும்.*

தொலைபேசி இல:-யாழ். - 021-2034, கொழும்புக் காரியாலயம் - 589185, 586820 (C-18779)



# மரண அறிவித்தல்

## அருணாசலம் நவமணிதேவி

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அருணாசலம் நவமணிதேவி அவர்கள் நேற்று (19.10.2001) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சரவணமுத்து அருணாசலத்தின் (அருள் Traders, மயிலிட்டி) அன்பு மனைவியும் கோபாலராஜன் (Samuel & Sons Limited, யாழ்ப்பாணம்.), இராஜ்குமார் (மாணவன், பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார். இவர் காலஞ்சென்ற கதிரேசு (விதானையார், மயிலிட்டி வடக்கு) - தங்கரத்தினம் தம்பதியரின் ஏக புத்திரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.10.2001) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக தெஹிவளை - கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

241, Hills Street,
Dehiwela.

தகவல்:
ச.அருணாசலம்

(C-18784)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.